ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 2) July 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

## அடியேன் உரை

நம்பெருமாளின் திருவுள்ளத்தாலும், பூர்வாசார்யர்களின் அனுக்ரஹத்தாலும் – நம்பெருமாள் விஜயம் – என்ற இந்த நூலின் முதல் மலரானது, நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் விளைவாக, மாதம் ஒருமுறை என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்த நூல், இனி ஒவ்வொரு ஏகாதசி அல்லது த்வாதசி நாளன்று வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாதம் ஆளவந்தாரின் திருநக்ஷத்ரம்(29.07.2007) வருகிறது. அந்த நன்னாளை ஒட்டி, இந்த இதழில் ஆளவந்தாரைப் பற்றி, பெரியதிருமுடியடைவு என்ற நூலில் உள்ள குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

முன்னரே கூறியபடி, இந்த இணைய தளத்தில் (www.namperumal.com) உள்ள இடப்பற்றாக்குறை காரணமாக, நடப்பு மாதத்திற்கான ப்ரதி மட்டுமே இந்த இணைய தளத்தில் வைக்கப்படும். பழைய ப்ரதிகள் வேண்டுவோர் groups.yahoo.com/emperumanar என்ற இணைய தளத்தில் பதிவு செய்து கொண்டு (இது முற்றிலும் இலவசமான பதிவே ஆகும்), அங்கு உள்ள Files Section மூலம் பெறலாம்.

இந்த முயற்சி தொடர உங்கள் கருத்துக்கள், ஆலோசனை ஆகியவை அவசியம் தேவையாகும். அவற்றை அடியேனின் sridharan_book@yahoo.co.in என்ற முகவரியில் மெயில் அனுப்பினாலும், அல்லது groups.yahoo.com/emperumanar என்பதில் தெரிவித்தாலும் நல்லது.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் … வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

## உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்
7. ஆளவந்தார்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

## ஸ்ரீரங்கராஜஸ்தவம்
(பகுதி – 2)

11. ஸ்வஸ்தி ஸ்ரீஸ்தந கஸ்தூரீ மகரீ முத்ரித உரஸ:
ஸ்ரீரங்கராஜாத் சரத: சதம் ஆசாஸ்மஹேதமாம்

பொருள் – ஸ்ரீரங்கநாச்சியாரின் ஸ்தனங்களில் கஸ்தூரியைக் குழைத்து, மீன்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. அந்த அடையாளங்கள், பெரியபெருமாளின் திருமார்பில் அழகாகப் பதிந்துள்ளன (இவன் அவளை அணைத்துக் கொள்ளும்போது பதிந்தன என்று கருத்து). இப்படிப்பட்ட திருமார்பை உடையவனும், திருவரங்கத்தின் சக்ரவர்த்தியுமான நம்பெருமாளிடம் நின்று, நமக்கு நீண்ட காலம் நன்மையை அளிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம்.

12. பாது ப்ரணதரக்ஷாயாம் விலம்பம் அஸஹந் இவ
ஸதா பஞ்சாயுதீம் பிப்ரத் ஸ ந: ஸ்ரீரங்கநாயக:

பொருள் – (இவ்விதம் நித்ய கைங்கர்யம் செய்வதற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் என்ன செய்வது? நம்பெருமாள் திருக்கரங்களில் வைத்துள்ள ஆயுதங்கள் அழகுக்கு அல்ல, இது போன்ற நேரத்தில் காப்பதற்கே என்றார்) பெரியபெருமாள், நம்மைப் போன்ற அடியார்களுக்கு ஏற்படும் ஆபத்து ஏற்படும்போது, அந்த ஆபத்தை நீக்குவதில் உள்ள காலதாமதத்தை பொறுக்கமாட்டான். ஆகவே, எப்போதும் உதவுவதற்காக, ஐந்து ஆயுதங்களை எப்போதும் வைத்துள்ளான். இப்படி நிற்கும் ஸ்ரீரங்கநாதன் நம்மைக் காக்கவேண்டும்.

13. அமதம் மதம் மதம் அத மதம் ஸ்துதம் பரிநிந்திதம்
ஸ்பவதி நிந்திதம் ஸ்துதம்
இதி ரங்கராஜம் உதஜூகுஷத் த்ரயீ ஸ்துமஹே வயம்
கிம் இதி தம் ந சக்னும:

பொருள் – பரம்பொருளை அறிய இயலாது என்ற ஞானம் ஏற்பட்டவுடன், அது அறியப்பட்டதாகிறது. அந்தப் பரம்பொருளைத் துதித்துவிடலாம் என்று எண்ணம் ஏற்பட்டால், அது நிந்திக்கப்பட்டதாகிறது. அதனை முழுவதுமாக துதிக்க இயலாது என்ற ஞானம் வந்தால், அது முழுவதுமாகத் துதிக்கப்பட்டதாகிறது. இப்படியாகவே வேதம் ஸ்ரீரங்கனாதனைக் குறித்து எண்ணுகிறது. இப்படி உள்ளபோது, அந்த அரங்கனை, அறிவில்லாதவர்களான நாம் என்னவென்று துதிக்க முற்படுகிறோம்?

விளக்கம் – யார் ஒருவன் தான் பெரியபெருமாளை முழுவதுமாக அறிவேன், அவனைத் துதித்து விடுவேன் என்று எண்ணுகிறானோ அவன் எதனையும் அறியாதவன், பெரியபெருமாளை இகழவே செய்கிறான். மாறாக, யார் ஒருவன் தனக்கு பெரியபெருமாளைப் பற்றி முழுமையாகத் தெரியாது, அவனைத் துதிக்கவும் தெரியாது என்று எண்ணுகிறானோ, அவனே உண்மையில் அரங்கனை முழுவதுமாக அறிந்தவனும், துதித்தவனும் ஆகிறான். இப்படியாகவே வேதங்கள் கூறுகின்றன. வேதங்களே இவ்விதம் கூறும்போது, அறிவற்ற நாம் எவ்விதம் அரங்கனைப் போற்ற இயலும்?

14. யதி மே ஸஹஸ்ர வதந ஆதி வைபவம் நிஜம் அர்ப்பயேத்
ஸ கில ரங்க சந்த்ரமா:
அத சேஷவத் மம ச தத்வத் ஏவ வா ஸ்துதி சக்தி
அபாவ விபவே அபி பாகிதா

பொருள் – பெரியபெருமாளை ஸ்துதி செய்ய எனக்குச் சக்தியில்லை (ஞானம் இல்லை). ஆனால் நிலவு போன்று குளிர்ந்துள்ள பெரியபெருமாள், தன்னுடைய ஆயிரம் வாய் (முகம்) போன்றவற்றை எனக்கும் தந்தருளினான் என்றால், அதன் பின்னர் அவனைத் துதிக்க இயலும். அதன் பின்னர், ஆதிசேஷன் அவனைப் போற்றுவது போன்றோ அல்லது அவனே அவனைத் துதித்துக் கொள்வது போன்றோ உள்ள திறன் எனக்கு ஓரளவு ஏற்படும். அதன் பின்னர் வேதங்கள் கூறுவது போன்று அவனைத் துதித்து முடிக்க இயலாது என்று கூறும் பெருமை எனக்கு ஏற்படும்.

விளக்கம் – நாம் ஒன்றைப் பற்றி எதுவுமே தெரியாமல் அல்லது அதனைத் தெரிந்து கொள்ளும் அதிகாரமே இல்லாதபோது, அந்த விஷயத்தைப் பற்றிப் பேச இயலாது என்று கூறுவது மடமை அல்லவா? அதனைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொண்டபின், முழுவதுமாகக் கூற இயலாது என்று உரைப்பதே பொருந்தும் அன்றோ? இதனையே இங்கு பட்டர் கூறுகிறார். பெரியபெருமாளைப் பற்றி முழுவதுமாகக் கூற இயலாது என்று வேதங்கள் கூறுவது போன்று, தான் கூற இயலாது, ஆனால் நம்பெருமாள் தனக்குச் சிறிதேனும் திறன் கொடுத்தால், பின்னர் வேதங்கள் கூறுவது போன்று தானும் உரிமையுடன் கூற இயலும் என்றார்.

15. ஸ: அங்க வேத யதிவா ந கிலேதி வேத:
ஸந்தேக்தி அநர்க்கவிதம் ஆத்மநி ரங்கநாதம்
ஸ்த்தாநே தத் ஏஷ கலு தோஷமலீமஸாபி:
மத் வாக்பி: ஐசம் அதிசாயநம் ஆவ்ருணோதி

அவதாரிகை – முதலில் தனக்குப் பெரியபெருமாளைத் துதிக்க சக்தி இல்லை என்றார். பின்னர், தனக்கு அதிகாரம் இல்லை என்றார். ஆனால் தனக்கு பெரியபெருமாளிடம் ஏற்பட்ட அபரிதமான அன்பு காரணமாக, பெரியபெருமாள் செய்தது என்ன என்று கூறுகிறார். தன்னிடம் சப்ததோஷம்(சரியான சொற்களை உபயோகிக்கும் திறன் இல்லாமை), ஞானதோஷம்(அவனைப் பற்றி முழுவதுமாக உணராமை), அர்த்ததோஷம் என்று பலவிதமான குறைபாடுகள் இருந்தாலும், பெரியபெருமாள் அதனை மறந்துவிடுகிறான் என்றார். அந்தப் பரிவு காரணமாக, தனது மேன்மையை மறைத்துக் கொண்டு, தன் மூலமாக ஸ்துதியைப் பெற்றுக் கொள்கிறான் என்றார்.

பொருள் – இந்தப் பெரியபெருமாள் அனைத்துவிதமான குறைபாடுகளாலும் நிறைந்துள்ள எனது சொற்களைக் கொண்டு, தன்னைப் புகழும்படிச் செய்து, தனது மேன்மையை(அதிசயத்தை எனலாம்) மறைத்துக் கொள்கிறான். இதனைக் கண்ட வேதங்கள், இந்த அரங்கன் தன்னுடைய பெருமைகளை முழுவதுமாக உணர்ந்தனா இல்லையா என்று சந்தேகத்துடன் நின்றன.

16. ஸ்வம் ஸம்ஸ்ருத த்ராவிட வேத ஸூக்தை:
பாந்தம் மத் உக்தை: மலிநீகரோதி
ஸ்ரீரங்க கம்ர: கலபம் க ஏவ ஸ்நாத்வா அபி
தூளீரஸிகம் நிஷேத்தா

அவதாரிகை – இவ்விதமாக பெரியபெருமாள் தனது கருணை காரணமாகத் தன்னுடைய மேன்மையை மறைத்து, உம்முடைய தோஷங்கள் நிறைந்த சொற்கள் கொண்டு தன்னைத் துதிக்கச் செய்தான் என்று கூறுகிறீர்கள். அவன் அவ்விதம் செய்தான் என்றாலும், நீவிர் உமது குறைபாடுகளை உணர்ந்து, துதிக்காமல் இருக்கலாம் அன்றோ என்று சிலர் பட்டரிடம் கேட்க, அவர் விடை தருகிறார்.

பொருள் – திருவரங்கத்தில் மிகவும் உகப்புடன் வாஸம் செய்யும் நம்பெருமாள், வடமொழியில் உள்ள வேதங்களாலும், தமிழ்மொழியில் உள்ள திவ்யப்ரபந்தங்களாலும், தன்னை நன்கு விளங்கும்படிச் செய்து கொண்டான். என்றாலும், எனது தோஷம் நிறைந்த சொற்கள் கொண்டு தன்னை மிகவும் தாழ்த்திக் கொள்கிறான். நன்றாக நீராடிய பின்னர், புழுதியை அள்ளித் தன் மீது தெளித்துக் கொள்ளும் யானையை, யாரால் தடை செய்ய இயலும்(அது போன்று, சுதந்திரமான பெரியபெருமாளின் செயலை யாரால் தடுக்க இயலும்)?

17. கிந்து ப்ரபத்தி பல தாரித விஷ்ணுமாய
மத் வம்ச்ய ராஜகுல துர்லலிதம் கில ஏவம்
ஸ்ரீரங்கராஜ கமலா பத லாலிதத்வம்
யத்வா அபராத்யதி மம ஸ்துதி ஸாஹஸே அஸ்மிந்

அவதாரிகை – கடந்த ஸ்லோகத்தில், பெரியபெருமாள் தனது கருணை காரணமாகத் தன்(பட்டர்) மூலமாகத் துதியை ஏற்றுக் கொண்டான் என்றார். அது மாத்திரம் அல்லாமல் வேறு ஏதாவது காரணம் உள்ளதா என்று பட்டரிடம் ஒருவர் கேட்க, அதற்குப் பட்டர் தனது குலப்பெருமையும் திருவரங்கத் திவ்யதம்பதிகளின் வளர்ப்பு மகன் என்ற பெருமையும் உள்ளது என்றார்(பராசர பட்டரை எம்பெருமானர் திருவரங்கத் திவ்யதம்பதிகளுக்கு ஸ்வீகாரப் புத்ரனாக அளித்து விட்டார். அன்று முதல் பட்டரை நம்பெருமாளும் ஸ்ரீரங்கநாச்சியாரும் வளர்த்து வந்தனர், அவருக்குத் தொட்டில் இடவும் செய்தனர்).

பொருள் – (எனக்கு, பெரியபெருமாளைத் துதித்துக் கவி இயற்றத் தகுதி இல்லை என்றாலும்) எனது முன்னோர்கள் பெரியபெருமாளிடம் கொண்ட ப்ரபத்தியால் ஏற்பட்ட மிடுக்கின் காரணமாக, அவனுடைய மாயையையே வென்றவர்கள் ஆவர். அந்தச் சிறந்த குலத்தில் நான் பிறந்ததால் எனக்கு உண்டான செறுக்கு காரணமாக, இவ்விதம் அவனைத் துதித்துக் கவி பாடும்படி ஆயிற்று. மேலும் ஸ்ரீரங்கநாதனாலும், ஸ்ரீரங்கநாச்சியாராலும், அவர்களது திருவடிகளிலேயே சீராட்டி வளர்க்கப்பட்ட தன்மையும் என்னை இவ்விதம் துதி இயற்றி, ஒரு குற்றவாளியாக நிற்க வைத்தது.

18. நாதஸ்ய ச ஸ்வ மஹிம அர்ணவ பாரத்ருச்வ
விஜ்ஞாந வாக்விலஸிதம் ஸஹதே ந வேத:
ஆபேக்ஷிகம் யதி தத் அஸ்தி மமாபி தேந
ஸ்ரீரங்கிண: ஸ்துதி விதௌ அஹம் அத்யகார்ஷம்

அவதாரிகை – கடந்த சில ஸ்தோத்ரங்களில் தனக்கு பெரியபெருமாளைத் துதிக்கத் தகுதி இல்லை என்றார். ஆனால் வேதபுருஷன் முதலானோர்கள் துதிக்கும்போது தனக்கும் அந்த அதிகாரம் உண்டு என்று கூறுகிறார்.

பொருள் – வேதங்களானவை பெரியபெருமாளின் பெருமைகள் எதுவும் அவனுக்கே முழுமையாகத் தெரியாது என்று முதலில் கூறின. அவனுடைய மஹாத்ம்யம் என்ற கடலின் கரையைக் காணும் ஞானம் அவனுக்கே இல்லை என்று கூறின. இருந்தபோதும், தங்களைவிட ஞானம் தாழ்ந்தவர்களைக் காட்டிலும் தங்களுக்கு ஞானம் அதிகம் என்பதால் அவை துதித்தன. இதே போன்ற தகுதி எனக்கும்(பட்டர்) உண்டு. எனவே நானும் பெரியபெருமாளைத் துதிக்கும் அதிகாரியானேன்.

19. அந்யத்ர அதத்குண உக்தி: பகவதி ந தத் உத்கர்ஷ சௌர்யை: பரேஷாம்
ஸ்துத்யத்வாத் யாவத் அர்த்தா பணிதி: அபி ததா தஸ்ய நிஸ்ஸீமகத்வாத்
ஆம்நாயாநாம் அஸீம்நாம் அபி ஹரி விபவே வர்ஷபிந்தோ: இவ அப்தௌ
ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப: நது கபளநத: ஸ்தோது: ஏவம் ந கிம் மே

பொருள் – நம்மால் துதிக்கப் பெறும் ஒருவனிடம் இல்லாத குணங்களையும் தன்மைகளையும் கூறிப் புகழ்வது ஒரு வகையாகும். இது பெரியபெருமாளைத் தவிர மற்றவர்களுக்குப் பொருந்தும். இவ்வகையான துதி என்பது பெரியபெருமாளுக்கு ஏற்காது – காரணம், அவனிடம் இல்லாதது என்று எதுவுமே இல்லை, மற்றவர்களைத் துதிக்கவும் இவனுடைய பெருமைகளை அல்லவா களவாடி(திருடி) அவர்களைப் புகழ வேண்டியதாக உள்ளது? நம்மால் துதிக்கப்படும் ஒருவனிடம் உள்ள பெருமைகளை, முழுவதுமாக, உள்ளது உள்ளபடிக் கூறித் துதிப்பது மற்றொரு வகையான துதியாகும். இதுவும் பெரியபெருமாள் விஷயத்தில் பொருந்தாது. ஏன்? அவனுடைய பெருமைகள் எல்லையற்றவையாக உள்ளதால் ஆகும். ஆயினும் வேதங்கள் எப்படி அவனைத் துதிக்க முடிந்தது? மழைத்துளியானது எப்படி கடலில் விழுந்தால் மட்டுமே தனது ஸ்வரூபத்தை இழக்காமல் உள்ளதோ, அதுபோன்று வேதங்களும் அவனைப் புகழ்வதால் மட்டுமே தங்கள் ஸ்வரூபம் இழக்காமல் உள்ளன. இப்படி உள்ளபோது, எனக்கும் என்னுடைய

வாக்கானது தனது ஸ்வரூபம் அடையவேண்டும் என்பதற்காக அவனைத் துதிக்கிறேன்.

விளக்கம் – மழையானது கடலிலும் விழுகிறது, தரையிலும் விழுகிறது. கடலில் விழுந்த மழைத்துளியானது தனது தண்ணீர் என்ற தன்மையை இழக்காமல் தெளிவாகவே உள்ளது. ஆனால், தரையில் விழுந்த மழைத்துளியானது, மண்ணுடன் கலந்து, சேறாக மாறி, தனது தன்மையை இழந்து நிற்கிறது. இது போன்று, நம்முடைய சொற்கள் பகவானைப் புகழ்வதுவரை மட்டுமே உறுதியுடன் இருக்கும். அந்த நிலை மாறும்போது, நமது சொற்கள் உறுதியை இழக்கின்றன. ஆக, வாக்கு உறுதி பெறுவதற்காக வேதங்கள் அவனைப் போற்றுவது போன்று, தனது வாக்கும் உறுதி பெறத் துதிக்கிறேன் என்றார்.

20. காவேரீம் அவகாஹிஷீய பகவந் போக அந்தராயீ பவத்
கர்ம க்லேச பல ஆசய ப்ரசமந உத்வேல அமல ஸ்ரோதஸம்
ஜந்தோ: ஸம்ஸரத: அர்ச்சிராதி ஸரணி வ்யாஸங்க பங்காய யா
லோகே அஸ்மிந் விரஜா இவ வேல்லிதஜலா ஸ்ரீரங்கம் ஆலிங்கதி

அவதாரிகை – பெரியபெருமாளின் இருப்பிடமான பெரியகோயிலுக்கு ஓர் அணியாய், அனைத்து உயிர்களுக்கும் ஜீவனம் அளிப்பதாய், அழகிய மணவாளன் என்பதால் கல்யாண சீர்வரிசைகளாகப் பல உயர்ந்த பொருள்களையும் கொண்டு வருவதாய், அவனுக்குத் தேவையான திருவாராதன தீர்த்தங்களை அளிப்பதாய் உள்ள திருக்காவேரியைத் துதிக்கிறார்.

பொருள் – இந்த உலகில் உள்ள உயிர்கள் அர்ச்சிராதி மார்க்கமாக மேலே எழும்போது எண்ணற்ற அலைச்சல் உண்டாகும். அதனை நீக்கி இந்த இடத்திலேயே விரஜா நதியில் நீராடலாம்போலே காவேரி நதியானது, ஸ்ரீரங்கத்தை அணைத்துக் கொண்டுள்ளது. இதில் நீராடுவதன் மூலம் பெரியபெருமாளை அடைவதற்குத் தடையாக உள்ள கர்மபலன்கள், பல்வேறு துன்பங்கள், கர்ம வாசனைகள் ஆகிய அனைத்தும் நீங்கிவிடுகின்றன. கரையைக் கடந்து ஓடுவதும், தெளிவானதும், ப்ரவாஹம் நிறைந்ததும் ஆகிய காவேரியில் நான் நீராடுவேன். (இந்தச் ஸ்லோகத்தின் மூலம் – காவேரியே விரஜா நதி என்றும், ஸ்ரீரங்கம் கோயிலுக்குக் செல்லும் பாதையே அர்ச்சிராதி மார்க்கம் என்றும், பெரியகோயிலே பரமபதம் என்றும், நம்பெருமாளே பரவாஸுதேவன் என்றும் உணர்த்தப்பட்டது).

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்
## (பகுதி – 2)

### 3–1–2 த்ர்யாத்மகத்வாத் து பூயஸ்த்வாத்

பொருள் – மூன்று பூதங்களையுமே கொண்டிருப்பதாலும், நீர் அதிகமாக உள்ளதாலும் ஆகும்.

ஸித்தாந்தம் – (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கான பதில்) – சூத்திரத்தில் உள்ள து என்ற பதம், இந்தப் பூர்வபக்ஷத்தினை நிராகரிக்கிறது. நீர் மட்டும் கொண்டு உடல் உண்டாக வாய்ப்பில்லை. உடல் உண்டாவதற்கு த்ரி வ்ருத்த கரணம் (த்ரிவ்ருத்த கரணம் என்றால் என்ன என்பது இந்தச் சூத்திரத்தின் இறுதியில் விளக்கப்பட்டுள்ளது) உள்ளது என்பதை, சாந்தோக்ய உபனிஷத் (6–3–3) – தாஸாம் த்ரிவிருத்தம் த்ரிவ்ருத்தம் ஏகைகாம் – அவற்றுள் ஒவ்வொன்றும் த்ரிவ்ருத்தம் த்ரிவ்ருத்தம் – என்று கூறியது. இங்கு நீரை மட்டும் ஏன் கூறியது என்றால், அது அதிக அளவில உள்ளதால் ஆகும். உடலில் இரத்தம் போன்ற திரவங்கள் அதிக அளவில் உள்ளதாலும், அவற்றில் நீர் உள்ளதாலும் உடலில் நீர் அதிக அளவு உள்ளது என்று அறிய முடிகிறது.

த்ரிவ்ருத்த கரணம் என்றால் என்ன?

(இந்தப் பகுதி சூத்திரத்திலோ அல்லது ஸ்ரீபாஷ்யத்திலோ இருப்பது அல்ல).

இப்போது நாம் த்ரிவ்ருத்த கரணம் என்றால் என்ன என்பதைக் காண்போம். பஞ்ச பூதங்களில் உள்ள நீர், நெருப்பு மற்றும் நிலம் ஆகிய மூன்றிலும் ஒவ்வொன்றிலும் மற்ற இரண்டு பூதங்களின் பகுதியைச் சேர்த்து உருவாக்குவதே த்ரிவ்ருத்த கரணம் என்பதாகும். இது எவ்விதம் நடைபெறுகிறது என்று காண்போம். முதலில் மூன்று பூதங்களும் சரிபாதியாகப் பிரிக்கப்படுகின்றன. உதாரணமாக நீரை எடுத்துக்கொண்டால் அது இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பிரிக்கப்பட்ட இரு பகுதிகளில், ஒரு பகுதி அப்படியே வைத்துக் கொள்ளப்படுகிறது. மீதம் உள்ள மற்றொரு பாதியானது மீண்டும் சரிபாதியாகப் (இரண்டாக) பிரிக்கப்படுகிறது. ஆக ஒவ்வொன்றும் 1/2 மற்றும் 1/4 + 1/4 என்று பிரிக்கப்படுகிறது. இவற்றிலிருந்து 1/2 பகுதி அப்படியே வைத்துக் கொள்ளப்படும். மீதம் உள்ள 1/2 பகுதிக்கு, மற்ற இரண்டிலிருந்தும் 1/4 பகுதிகள் எடுத்துச் சேர்க்கப்படும். உதாரணமாக நீரை எடுத்துக் கொள்வோம். இதில் நீரிலிருந்து எடுக்கப்பட்ட 1/2 பகுதியும், நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட 1/4 பகுதியும், நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட 1/4 பகுதியும் சேர்க்கப்பட்டு ஸ்தூல நீராக மாறுகிறது. ஆக நீரில் மூன்று பூதங்களுமே கலந்திருப்பதாக உணர வேண்டும். இது போன்றே மற்ற இரண்டிற்கும் கொள்ளவேண்டும். மேலே உள்ள சூத்திரத்தில் நீரை மட்டுமே வைத்துக் கொண்டு உடல் உருவாகாது என்பதை இப்போது உணர இயலும்.

### 3–1–3 ப்ராணகதே : ச

பொருள் – ப்ராணன்களும் (இந்த்ரியங்களும்) செல்வதால் (இந்த்ரியங்களுக்கு ஆதாரமாக உள்ள பூத சூட்சமங்களும் ஜீவனுடன் செல்கின்றன).

பாஷ்யம் – இதன் மூலம், ஜீவன் கிளம்பும் போது பூதசூட்சமங்களுடன் செல்கிறான் என்று அறியலாம். ஜீவன் வெளியே கிளம்பும்போது, அவனுடன் முக்கிய ப்ராணன் (மூச்சுக் காற்று) கிளம்புகிறது. இதனை ஸ்ருதி வரியான ப்ருஹத் உபநிஷத் (4–4–2) – தம் உத்க்ராமந்தம் ப்ராண: அனூத்க்ராமதி ப்ராணம் அனூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா: அனூத்க்ராமந்தி – உடலை விட்டுக் கிளம்பும் ஜீவனுடன் முக்கிய ப்ராணன் கிளம்புகிறது, முக்கியப்ராணனைத் தொடர்ந்து மற்ற ப்ராணன்களும் (இந்த்ரியங்கள்) கிளம்புகின்றன – என்று கூறியது. இதனையே ஸ்ம்ருதியான ஸ்ரீமத் பகவத் கீதை(15:7,8) கீழே உள்ளபடி கூறுகிறது:

மந: ஷஷ்டாநி இந்த்ரியாணி ப்ரக்ருதி ஸ்தாநி கர்ஷதி
சரீரம் யத் அவாப்நோதி யத் ச அபி உத்க்ராமதீச்வர:
க்ரஹீத்வைதாநி ஸம்யாதி வாயு: கந்தாவிவாசயாத்.

இதன் பொருள் – சரீரம் ஒன்றை அடைந்தது தொடங்கி, அதனை விட்டுக் கிளம்பும்வரை, மனம் மற்றும் ஐந்து இந்த்ரியங்களை ஜீவன் நியமித்தபடி உள்ளான், அந்த உடலுக்கு ஈச்வரன் ஜீவனே, காரணம் அதனை அவனே நியமிப்பதால் ஆகும், காற்றானது எவ்விதம் மலர்களிடம் உள்ள நறுமணத்தைக் கவர்ந்து செல்லுமோ அதுபோன்று, உயிர் பிரிந்த பின்னர், ஜீவன் தன்னுடன் இவை அனைத்தையும் (இந்த்ரியங்கள்) எடுத்துச் செல்கிறான். இந்த்ரியங்கள் என்பது அவற்றுக்கான இருப்பிடம் இல்லாமல் இருக்க முடியாது. ஆகவே அவை கிளம்பும்போது, அவற்றுக்கான இருப்பிடமாக உள்ள பூதசூட்சமங்களும் கூடவே செல்கின்றன என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

### 3–1–4 அக்நிங்யாதி கதி ச்ருதே: இதி சேத் ந பாக்தத்வாத்

பொருள் – மரணகாலத்தில் இந்த்ரியங்கள் என்பது அக்னியுடன் இணைவதாகக் கூறுவதால், ப்ராணன் ஜீவனுடன் செல்வதில்லை என்று கூறினால் – நாம் மறுக்கிறோம், காரணம் அங்கு வேறு ஒரு பொருளில் (அர்த்தத்தில்) கூறப்பட்டது.

பூர்வபக்ஷம் – ப்ருஹத் உபநிஷத் (5–2–13) – யத்ர அஸ்ய புருஷஸ்ய ம்ருதஸ்ய அக்நிம் வாக் அப்யேதி வாதம் ப்ராண: சக்ஷுராதித்யம் – (உயிர் பிரிந்தபின்) இறந்தவனின் உடலில் உள்ள வாக்கு அக்னியில் இணைகிறது, ப்ராணன் வாயுவில் இணைகிறது, கண்கள் சூரியனில் இணைகிறது – என்ற கூறுப்பட்டது. ஆக, இதன் மூலம் மரணகாலத்தில் வாக்கு, ப்ராணன் போன்றவை அக்னி முதலானவற்றில் இணைவதை அறியலாம். எனவே அவை (இந்த்ரியங்கள்) ஜீவனுடன் செல்வதில்லை. எனவே சூத்திரம் 3–1–3ல் உள்ள – தம் உத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா: உத்க்ராமந்தி – என்பதற்கு வேறுவிதமாகவே பொருள் கற்பிக்க வேண்டும்.

ஸித்தாந்தம் – இவ்விதம் வாதம் செய்ய இயலாது – காரணம், வாக்கு போன்றவை அக்னி முதலானவற்றில் இணைவதாகக் கூறியது வேறு ஒரு அர்த்தத்தின் காரணமாக ஆகும் (அந்த தேவதைகள் அவற்றின் மீது உள்ள தங்கள் தொடர்பைக் கைவிடுகின்றன என்று பொருள்). அந்த உபனிஷத் வரிக்கு வேறு ஓர் அர்த்தம் உள்ளதாக எவ்விதம் கூற இயலும்? அதே வரியில் – ஓஷதீர் லோமாநி வநஸ்பதீந் கேசா: – இறந்தவனின் தலை முடிகள் மரங்களிலும், கைமுடிகள் செடிகளிலும் கலக்கின்றன – என்று கூறப்பட்டது. ஆனால் இவ்விதம் இந்த முடிகள் கலப்பதில்லை என்று நாம் கண்ணால் பார்க்கிறோம். ஆகவே கண்கள் சூரியனிடம் செல்கின்றன என்பது போன்ற வரிகள், அந்தந்த அபிமான தேவதைகள் (கண்களுக்கு அபிமான தேவதை சூரியன்), அந்தந்த இந்த்ரியங்கள் மீது உள்ள கட்டுப்பாட்டை விலக்கி, அவற்றைத் தங்களுடன் இணைத்துக் கொள்கின்றன என்று கருத்து. இதனை பாஷ்யத்தில் உள்ள – அப்ரக்ரமணபரா – என்பதன் மூலம் அறியலாம். எனவே ஜீவன் கிளம்பும்போது இந்த்ரியங்களுடனும், அவற்றின் பூதங்களுடனும் செல்கிறான் என்று கருத்து.

### 3–1–5 ப்ரதமே அச்ரவணாத் இதி சேத் ந தா ஏவ ஹி உபபத்தே:

பொருள் – முதல் ஹோமத்தில் கூறப்படாத காரணத்தினால், ஜீவன் பூதசூட்சமங்களுடன் செல்வதில்லை. இவ்விதம் கூறுவது பொருந்தாது – காரணம் நீர் அல்லவோ கூறப்பட்டுள்ளது. இப்படிக்கொண்டால் மட்டுமே கேள்வி பதில் பொருந்தும்.

பூர்வபக்ஷம் – ஜீவன் கிளப்பும்போது மற்ற பூதங்களுடன் கூடிய நீருடனே செல்கிறான் என்று வேள்வி–பதில் பகுதிகள் மூலம் அறியப்படுவதாகச் செல்வது பொறுந்தாது. இதன் காரணம், ஸ்வர்க்கம் என்ற அக்னியில் செய்யப்படும் முதல் ஹோமமாக நீர் கூறப்படவில்லை. சாந்தோக்ய உபநிஷத் (5–4–2) – தஸ்மைந் ஏதஸ்மிந் அக்நௌ தேவா: ச்ரத்தாம் ஜுஹ்வதி – தேவலோகம் என்ற அக்னியில் தேவர்கள் ச்ரத்தையை (மனித மனத்தின் ஒரு செயல்பாடு) ஹோமம் செய்கின்றனர் என்று

கூறியது. ச்ரத்தை என்பது மனித மனதின் ஒருவிதத் தன்மை என்பது அறிந்ததே. ஆக, இங்கு நீர் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

ஸித்தாந்தம் – இது தவறான வாதமாகும். நீர் என்பதே ச்ரத்தை என்ற பதம் மூலம் கூறப்பட்டுள்ளது. இப்படிக் கொண்டால் மட்டுமே கேள்வி–பதில் பகுதியில் உள்ள கேள்வியும் பதிலும் பொருந்தும். எப்படி? சாந்தோக்ய உபநிஷத் (5–3–3) – வேத்த யதா பஞ்சம்யாமா ஹுதாவாபம் புருஷவசஸோ பவந்தி – ஐந்தாவது ஆஹுதியாக இடப்படும் நீர் என்பது புருஷன் என்று கூறப்படுவது ஏன் என்று அறிவாயா – என்று கேட்டது. இதற்கான பதிலாக சாந்தோக்ய உபநிஷத் (5–4–2) – அக்னியில் இடப்படும் ஆஹுதியாக ச்ரத்தை பற்றிக் கூறியது. இங்கு ச்ரத்தை என்பது நீர் என்பதைக் குறிக்கவில்லை என்றால், கேள்வி ஒன்று, பதில் வேறு ஒன்று என்ற குறைபாடு ஏற்படும் அல்லவா? ஆக கேள்வியும் பதிலும் தொடர்பில்லாமல் போய்விடும் அன்றோ? சாந்தோக்ய உபநிஷத்(5–9–1) – இதி பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி – இப்படியாகவே ஐந்தாவது ஆஹுதியான நீர் என்பது புருஷன் என்று கூறப்படுகிறது – என முடிப்பதைக் காணும்போது, நீர் என்பதே ச்ரத்தை என்ற பதம் மூலம் கூறப்பட்டதை உணரலாம். சாந்தோக்ய உபனிஷத்(5–3–3) – வேத்தயதா – எப்படி என்று – எனக் கேள்வி எழுவதையும், சாந்தோக்ய உபநிஷத்(5–9–1) – இதி து பஞ்சம்யாம் – இப்படியாக ஐந்தாவது – என்று பதில் கூறி முடிப்பதையும் காணும்போது, நடுவில் உள்ள பல வரிகளும், கேள்வியின் பதில்களாகவே உள்ளதை அறியலாம்.

நீர் என்பதே ச்ரத்தை, ஸோமராஜா, வர்ஷ(மழை), அன்னம்(உணவு), ரேதஸ் (விந்து) மற்றும் கர்ப்பம் என்று பலவிதமாக மாற்றம் அடைவதையே – ஏவம் ஆப: புருஷவசஸ – என்று கூறப்பட்டது. நீர் என்பதே ச்ரத்தை என்று கூறப்படுவதை, தைத்திரீய ப்ராம்மணம்(3–2–4) – ஆப: ப்ரணயதி ச்ரத்தா வா ஆப: – அவன் நீரை எடுக்கிறான், ச்ரத்தை என்பது நீர் – என்பதன் மூலம் அறியலாம். ஸோமராஜாவாக மாறுவது என்பது நீரால் மட்டுமே இயலும் என்பதை சாந்தோக்ய உபநிஷத்(5–4–2)– ச்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா: ஆஹுதே: ஸோமராஜா ஸம்பவதி – ச்ரத்தையை ஆஹுதியாக அளிக்கிறான், அந்த ஆஹுதியில் இருந்து ஸோமராஜா வெளிப்படுகிறான் – என்று கூறியது. எனவே நீர் முதலான பூதசூட்சமங்களுடன் இணைந்தே ஜீவன் கிளம்புகிறான் என்று கூற வேண்டும்.

### 3–1–6 அச்ருதத்வாத் இதி சேத் ந இஷ்ட அதிகாரிணாம் ப்ரதீதே

பொருள் – ஜீவன் போகிறான் என்று கூறப்பட்டவில்லையே – இவ்விதம் ஆட்சேபம் செய்வது சரியல்ல. யாகம் போன்றவற்றை இயற்றும் ஜீவன்கள் பற்றியே கூறப்பட்டன.

பூர்வபக்ஷம் – நீர் முதலான பூதசூட்சமங்களுடன் ஜீவன் செல்வதாக நீங்கள் கூறினீர்கள். இது சரியல்ல. இந்த வரிகளில் நீர், ச்ரத்தை போன்றவை மட்டும் கூறப்பட்டன அன்றி, ஜீவன் பற்றி ஏதும் கூறப்படவில்லை. ச்ரத்தை போன்றவை ஆஹுதிகளாக, மட்டுமே கூறப்பட்டன, அவைகளால் சூழ்ப்பட்டது ஜீவன் என்று கூறப்படவில்லை.

ஸித்தாந்தம் – அப்படி அல்ல. இஷ்ட பூர்த்தம் (ஏதேனும் பயனை விரும்பிச் செய்யும் யாகம் போன்றவை) விஷயமாகச் செயல் புரியும் அதிகாரிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அந்த உபநிஷத் வரியிலேயே தொடர்ந்து படிக்கும்போது, இஷ்டம் – பூர்த்தம் – தானம் (இஷ்டம்=யாகம், பூர்த்தம் = குளம் வெட்டுதல், கோயில் கட்டுதல்) ஆகியவற்றைச் செய்பவர்கள், ப்ரஹ்மஞானம் அற்றவர்களாக ஸ்வர்க்கம் புகுந்து ஸோமராஜாவாக மாறுவதாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் செய்த புண்ணிய பலன்கள் தீர்ந்து போனவுடன் மறுபடியும் பூமிக்கு வந்து எதோ ஒரு கர்ப்பத்தில் புகுவதாகக் கூறப்பட்டது. இதனை சாந்தோக்ய உபநிஷத்(5–10–3) – அத ய இமே க்ராமே இஷ்டாபூர்த்தே தத்தம் இதி உபாஸதே தே தூமம் அபி ஸம்பவந்தி – கிராமங்களில் இருந்தபடி யாகம் இயற்றுதல், குளம் வெட்டுதல், தானம் செய்தல் போன்றவற்றைச் செய்தவர்கள், தூமாதி மார்க்கமாக (வழியாக) ஸ்வர்க்கம் செல்கின்றனர் – என்று தொடங்கியது. இதனை முடிக்கும்போது, அதே உபநிஷத்(5–10–4,5) – பித்ரு லோகாந் ஆகாசம் ஆகாசாத் சந்த்ரமஸம் ஏஷ ஸோமோராஜா தத் தேவாநாமந்நம் தம் தேவா: பக்ஷயந்தி, தஸ்மிந் யாவத் ஸம்பாத உஷித்வா அத ஏதம் ஏவ அத்வாநம் புந: நிவர்த்தந்தே, யோயோ ஹி அந்நமத்தி யோ யோ ரேத: ஸிஞ்சதி தத் பூய ஏவ பவதி – பித்ருலோகத்தில் இருந்து

ஆகாயம் அடைகிறான், அங்கிருந்து சந்த்ரமண்டலம் அடைகிறான், அங்கு ஸோமராஜாவாகிறான், தேவர்களின் உணவாகிறான், அவனைத் தேவர்கள் உண்கின்றனர், கர்மபலன் முடியும்வரையில் ஸ்வர்க்கத்தில் வாழ்ந்து, பின்னர் மேலே சென்ற வழியாகவே மீண்டும் பூமிக்குத் திரும்புகிறான், அன்னத்தை உட்கொண்டு, விந்துவை வெளியேற்றி, புருஷனாகிறான் – என்று கூறியது.

மேலே உள்ள பல வரிகளையும், சாந்தோக்ய உபநிஷத்(5–4–2) – ச்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமோராஜா ஸம்பவதி – ச்ரத்தையை அளிக்கிறார்கள், அந்த ஆஹுதியில் இருந்து ஸோமராஜா உதிக்கிறான் – என்று த்யுலோக அக்னி பற்றிக் கூறும் வரியையும் இணைத்துப் பார்க்கும்போது – ச்ரத்தை போன்ற மனநிலையுடன் யாகம் முதலானவற்றைச் செய்த ஜீவனே, ஸோமராஜா எனப்படும் தேவ உடல் பெறுவதாக உணர்த்தப்பட்டது. ஜீவனை விட்டுப் பிரியாத அவனது உடல் என்பதே ச்ரத்தை, ஸோமராஜா என்று பதங்கள் மூலம் கூறப்பட்டதால், அதே பதங்கள் ஜீவனையும் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். எனவே ஜீவன் பூதசூட்சமங்களுடன் செல்கிறான் என்றாகிறது.

பூர்வபக்ஷம் – நீங்கள் கூறும் சாந்தோக்ய உபநிஷத்(5–10–4) – தம் தீவா பக்ஷயந்தி – (ஸோமராஜாவை) தேவர்கள் உண்ணுகின்றனர் – என்பதை எடுத்துக் கொள்வோம். ஜீவனை உணவு போன்று உண்ண முடியாது அல்லவா? ஆகவே ஸோமராஜா என்ற பதம் மூலம், ஜீவன் குறிப்பிடப்படவில்லை. இதற்கு விடையாக அடுத்த சூத்திரம் உள்ளது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
(பகுதி – 2)

## அதிகாரம் – 1 – உபோத்காத அதிகாரம்

ஆபகவத்த: ப்ரதிதாம் அனத்யாம் ஆசார்யஸந்ததிம்
மனஸி மம யத்ப்ரஸாதாத் வஸதி ரஹஸ்யத்ரயஸ்ய ஸார: அயம்

பொருள் – எந்தவிதமான தோஷங்கள் அற்றதும், மிகவும் ப்ரஸித்தமானதும், பகவான் வரை நீடித்துள்ளதும் ஆகிய குரு பரம்பரையை நான் வணங்குகிறேன். அவர்கள் அருளால் என் மனதில், மூன்று ரஹஸ்யங்களின் (திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமஸ்லோகம்) உட்கருத்துக்கள் எப்போதும் நிலைத்திருக்கின்றன.

கர்மம் ப்ரஹ்ம ஆத்மகே சாஸ்த்ரே கௌதஸ்குத நிவர்த்தகாந்
வந்தே ஹஸ்திகிரி ஈசஸ்ய வீதீசோதக கிங்கராந்

பொருள் – கர்மகாண்டம், ஞான காண்டம் என்ற இரு பகுதிகளை உடைய வேதசாஸ்திரங்களின் விஷயத்தில் ஒரு சிலர் – ஏன், எதற்கு – என்று வாதம் செய்து வந்தனர். இவர்களை வென்ற அப்புளாரை வணங்குகிறேன். இதன் மூலம் இவர், ஹஸ்திகிரியின் நாதனான வரதராஜனை அடையும் தெருவை (மார்க்கத்தை) தூய்மைப்படுத்தினார்.

ஆளும் அடைக்கலம் என்று எம்மை அம்புயத்தாள் கணவன்
தாளிணை சேர்ந்து எமக்கும் அவை தந்த தகவுடையார்
மூளும் இருட்கள் விள்ள முயன்று ஓதிய மூன்றின் உள்ளம்
நாளும் உகக்க இங்கே நமக்கு ஓர் விதி வாய்க்கின்றதே

பொருள் – தாமரை மலரில் உதித்த மஹாலக்ஷ்மியின் நாயகனான எம்பெருமானின் இணைந்த திருவடிகள் மட்டுமே தங்களைக் காக்கும் என்றும், அவன் மட்டுமே தங்கள் அடைக்கலம் என்றும் அறிந்து கொண்டு நமது ஆசார்யர்கள் செய்தது என்னவென்றால் – அவனது திருவடிகளையே தங்கள் உபாயமாகப் பற்றி, அந்தத் திருவடிகளையே நமக்கும் உபாயமென்று காட்டினர். இப்படிப்பட்ட ஆசார்யர்கள், நமது அறியாமை என்னும் இருளை விலக்க, மூன்று ரஹஸ்யங்களின் உட்பொருளை நமக்கு அளித்தனர். ரஹஸ்யத்ரயத்தின் உட்கருத்தை அன்றாடம் அனுபவித்து மகிழவல்ல ஒப்பற்ற பாக்கியம், இந்த உலகில், நமது ஆசார்ய பரம்பரை மூலம் கிட்டியுள்ளதே.

மணிவர இவ சௌரே: நித்யஹ்ருத்ய: அபி ஜீவ:
கலுஷமதி: அவிந்தந் கிங்கரத்வ ஆதிராஜ்யம்
விதி பரிணதி பேதாத் வீக்ஷித: தேந காலே
குருபரிஷத் உபஜ்ஞாம் ப்ராப்ய கோபாயதி ஸ்வம்

பொருள் – எம்பெருமாளுக்கு மிகவும் ப்ரியமான கௌஸ்துபமணி போன்று ஜீவனும் எம்பெருமாளுக்கு மிகவும் பிரியமானவனே ஆவான். ஆனால், தனது அறியாமையால் அவனது புத்தி கலங்கி, பரம்பொருளுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யத்தை கைவிடுகிறான். ஆயினும் அவன், ஒரு காலகட்டத்தில், எம்பெருமானின் கடாக்ஷத்தின் மூலம் அந்த ஜீவன் தனது ஸ்வரூபம் பற்றிய ஞானம் (தான்

அவனுக்கு அடிமை, அவனுக்காக மட்டுமே உள்ளேன் என்ற அறிவு) பெற்றுவிடுகிறான். இந்த நிலை அந்த ஜீவனுக்கு, அவனது ஆசார்யர்களின் உபதேசங்களால் கிட்டப்பெருகிறது. இதனால் அவன் தன்னைக் காத்துக் கொள்கிறான்.

## ஜீவனின் தகுதிகள்

ஶ்ரீய:பதியான ஸர்வேச்வரனுக்கு ஶ்ரீகௌஸ்துப ஸ்தானீயனாய்க் கொண்டு ஹ்ருதயங்கமனாய் குமாரனென்றும், புத்ரனென்றும், சிஷ்யனென்றும், ப்ரேஷ்யனென்றும், சேஷபூதனென்றும், தாஸபூதனென்றும், அவ்வோ சாஸ்த்ரங்களிலே ப்ரதிபன்னனாயிருக்கும் ஜீவாத்மா.

விளக்கம் – ஜீவாத்மா, பரம்பொருளுக்கு அவனுடைய கௌஸ்துபமணி போன்று மிகவும் ப்ரியமானவன் என்று பல சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஜீவாத்மா பரம்பொருளின் இளவரசன் என்றும், புத்திரன் என்றும், சிஷ்யன் என்றும், வேலையாள் என்றும், அவனுக்காக மட்டுமே உள்ளவன் என்றும், அடிமை என்றும் கூறப்பட்டான்.

இவன் தனக்கு வகுத்த சேஷியாய், அயர்வறும் அமரர்கள் அதிபதியாய், உயர்வற உயர்நலம் உடையவனாய், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனாய், ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானான ஸர்வேச்வரன்

விளக்கம் – இந்த ஜீவனுக்கு எஜமானனாகவும், அறியாமை என்ற இருள் சூழாமல் உள்ள நித்யசூரிகளின் அதிபதியாகவும், தன்னைக்காட்டிலும் உயந்தவை என்று ஏதும் இல்லாத கல்யாண குணங்கள் கொண்டவனாகவும், தனது திருமார்பில் வீற்றிருப்பவளான தாமரையில் பொருந்திய மஹாலக்ஷ்மியை எந்த அளவு விரும் புகிறானோ அந்த அளவிற்கு நம்மையும் விரும்புபவனாகவும், இந்த உலகில் உள்ளவர்கள்–அந்த உலகில் உள்ளவர்கள் ஆகிய அனைவருக்கும் நாதனாகவும் ஸர்வேச்வரன் உள்ளான்.

வைகுண்டே து பரே லோகே ஶ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே என்றும், ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப என்றும் சொல்லுகிறபடியே பெரிய பிராட்டியாரோடே கூடத் தெளிவிசும்பிலே, யா அயோத்யா இதி அபராஜிதா இதி விதிதா நாகம் பரேண ஸ்திதா என்கிறபடியே அயோத்யாதிசப்தவாச்யமான கலங்காப் பெருநகரிலே, ஸஹஸ்ரஸ்தூணாதி வாக்யங்களாலே ஓதப்படுகிற திருமாமணி மண்டபத்திலே, கௌஷீதகி ப்ராம்மணதிகளிலே ஓதப்படுகிற பர்யங்க விசேஷத்திலே, சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் என்றும், நிவாஸசய்யாஸந என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதேச – ஸர்வகால – ஸர்வவஸ்தோசித் – ஸர்வவித – கைங்கர்யங்களையும், ஸர்வவித சரீரங்களாலே அனுபவித்துச் சேஷத்வமே தனக்கு நிரூபகமாகையாலே சேஷன் என்றே திருநாமமாகும்படியான திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளி மெத்தையிலே வானிளவரசாய்க் கொண்டு தான் வாழ்கிற வாழ்வை ஸர்வாத்மாக்களும் அனுபவித்து க்ருதார்த்தராக வேணும் என்று ஸஹ்ருதனாயிருக்கிற

விளக்கம் – (பரம்பொருள் எவ்விதம் உள்ளான் என்று கூறப்படுகிறது) லைங்கபுராணம் – வைகுண்டே து பரே லோகே ஶ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே – அனைத்து உலகங்களின் எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன், வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மியுடன் பொருந்தியுள்ளான் – என்று கூறியது. திருவாய்மொழியில்(4–9–10) – ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப – அழகான கைவளையல்கள் அணிந்தவளான மஹாலக்ஷ்மியுடன் நீ நிற்க – என்று கூறினார். இவ்விதமாகப் பெரியபிராட்டியுடன் கூடியவனாக உள்ளான். (எங்கு உள்ளான் என்று கூறப்படுகிறது) ஶ்ரீகுணரத்நகோஸம் (23) – யா அயோத்யா இதி அபராஜிதா இதி விதிதா நாகம் பரேண ஸ்திதா – வைகுண்டத்திற்கும் அப்பால் அயோத்யா என்றும், எவராலும் வெல்ல இயலாத அபராஜிதா என்றும் கூறப்படும் நகரத்தில் – என்பதற்கு ஏற்ப அயோத்யா என்று கூறப்படும் மாற்றம் அடையாத பெருநகரில் உள்ளான். தலவகாரோபநிஷத் – ஸஹஸ்ரஸ்தூணாதி – ஆயிரம் தூண்கள் உடைய – என்று கூறும் திருமாமணி மண்டபத்தில் அமர்ந்துள்ளான். அந்த மண்டபத்தில் கௌஷீதகி ப்ராம்மணத்தில் கூறுவது போன்று (4–1–5) – பர்யங்க – உயர்ந்த ஸிம்ஹாஸநத்தில் – அமர்ந்துள்ளான். (அத்தகைய ஸிம்ஹாஸநம் எது என்று அடுத்து கூறுகிறார்) முதல் திருவந்தாதி (53) – சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் –

என்னும்படி ஆதிசேஷன் எம்பெருமான் நடந்தால் குடையாகவும், அவன் அமர்ந்தால் அமரும் ஸிம்ஹாஸநமாகவும் உள்ளான், ஸ்தோத்ர ரத்னம்(40) – நிவாஸசய்யாஸந – அவனது இருப்பிடமாகவும், ஆசனமாகவும் உள்ளான் – என்று கூறப்படும் ஆதிசேஷன் என்னும் உயர்ந்த ஸிம்ஹாஸநத்தில் அமர்ந்துள்ளான். இந்த ஆதிசேஷன் எம்பெருமான் எங்கு சென்றாலும், எப்போது சென்றாலும், எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் அந்தந்த நிலைக்கேற்ப தனது உருவம் கொண்டு எம்பெருமானுக்கு அனைத்துப் பணிவிடைகளையும் செய்கிறான். ஆக அவன் எம்பெருமானின் அனைத்து நிலைகளிலும் உதவியபடி, தனக்கென்று எந்த எண்ணமும் இல்லாமல், பகவானுக்கு மட்டுமே அடிமையாக உள்ளதான் சேஷன் எனப்படுகிறான். இப்படிப்பட்ட ஆதிசேஷன் என்ற படுக்கையில் உள்ளபடி அனைத்தையும் ஆட்சி செய்தபடி உள்ளான். இவ்விதம் தான் கொண்டுள்ள நிலையான வாழ்வு போன்று, அனைத்து ஆத்மாக்களும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாகவே எம்பெருமான் உள்ளான்.

## ஜீவன் தனது ஸ்வரூபம் இழத்தல்

இருப்பு அடியாக நித்யானுபவம் பண்ணுகிற அந்தமில் பேரின்பத்தடியரான நித்யஸூரிகளோடு ஒக்கத் தானும் ஸ்வாமி கைங்கர்யத்துக்கு ஸ்வரூபயோக்யதையாலே இட்டுப் பிறந்து வைத்து அநாதிமாயையாலே ஸுப்தனாய் – அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் மோஹ ச்ரம ப்ரயாதோ அஸௌ வாஸநா ரேணு குண்டித: – என்கிறபடியே ப்ரக்ருதியாகிற பாழிலே விழுந்து ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து தட்டித்தாவற்று அழுக்கடைந்து, ஒளி அழிந்தபடியாலே தத்வஹித விஷயமாய் யதாவத்ப்ரகாசா ரஹிதனாய் நிற்க:

விளக்கம் – இவ்விதம் ஜீவன் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி, எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதில் எல்லையற்ற ஆனந்தம் கொண்ட நித்யசூரிகளுக்கு இணையாகத் தானும் கைங்கர்யம் செய்யும் தகுதி பெற்றவனே ஆவான். ஆனால் இந்த ஜீவன் தொடக்கமற்ற மாயையின் பிடியில் சிக்கிவிடுகிறான். இதனால் ப்ரக்ருதி என்ற பாலை நிலத்தில் விழுந்த விதை போன்று உள்ளான். பலப்பல பிறவிகளைத் தொடர்ந்து எடுத்தபடி உள்ளான். தான் எதற்காக உள்ளோம் என்ற எண்ணமே அவனுக்கு இருப்பதில்லை. தனக்கு ஆறுதலும் ஆதரவும் இல்லாமல் தவிக்கிறான். தனது ஸ்வரூப ஒளியை இழந்து, உண்மையான ஞானத்தையும் இழக்கிறான். இதனை விஷ்ணு புராணம் கீழே உள்ளபடி கூறுகிறது:

அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந்<br>
மோஹ ச்ரம ப்ரயாதோ அஸௌ வாஸநா ரேணு குண்டித:

இதன் பொருள் – பல ஆயிரம் பிறவிகள் எடுத்து, ஸம்ஸாரம் என்ற வழியில் சிக்குண்டு, (தான் யாரென்று அறியாதபடி) மயக்கத்தையும் அடைந்து, அதனால் சிரமம் அடைந்து, கர்மவாசனை என்னும் புழுதி சூழ, ஞானம் இழந்து ஜீவன் உள்ளான்.

## ராஜகுமார உதாரணம்

ஒரு ராஜா அந்தப்புரத்துடனே வேட்டைக்குச் சென்று விளையாட்டிலே ஸக்தனான அளவிலே வார்த்தை அறிவதற்கு முன்பே வழி தப்பின ராஜகுமாரன் எடுத்தார்கையிற் பிள்ளையாய் ஏதேனும் ஒரு குறிச்சியிலே வளர, அவன் தனக்கில்லாத சபரத்வாதிஜாதிகளை ஏறிட்டுக் கொண்டு,

விளக்கம் – ஒரு நாட்டின் ராஜா, தனது அந்தப்புர நாயகிகளுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். அவன் தனது வேட்டையில் ஆழ்ந்து, தன்னையே மறந்தான். அந்த ராஜாவின் புத்ரனான ராஜகுமாரன், தான் யார் என்பதே அறியாமல், சொற்கள் கூடப் பேசத் தெரியாத பருவத்தில் உள்ளவன் ஆவான். அந்த ராஜகுமாரன் தனது வழியைத் தவறவிட்டான். வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்த அவனை, அந்தக் காட்டிலுள்ள வேடர்கள் அழைத்துக் கொண்டுபோய், தங்கள் இருப்பிடத்தில் வளர்த்து வந்தனர். அவனும் அங்கு (அவனுடைய அரசபிறவிக்கு) தனக்கு ஏற்காத வேடுவ வாழ்க்கை வாழ்ந்து வந்தான்.

மாதா அபி ஏகா பிதா அபி ஏக: மம தஸ்ய ச பக்ஷிண:
அஹம் முநிபி: ஆநீத: ஸ ச ஆநீத: கவாசனை:
அஹம் முநீநாம் வசனம் ச்ருணோமி கவாசனானாம் ஸ வச: ச்ருணோதி
ப்ரத்யக்ஷம் ஏதத் பவதா அபி த்ருஷ்டம் ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி

விளக்கம் – (ஒரு குலத்தில் பிறந்த ஒருவன் மற்றொரு குலத்தில் தொடர்ந்து இருந்தால் தனது தன்மைகளை மறந்து, தான் இப்போது உள்ள குலத்தினர் போன்று தன்னை மாற்றிக் கொள்வானா என்ற ஐயம் ஏற்படலாம். இதற்கான விடையை விஷ்ணு புராண வரிகள் மூலம் உணர்த்துகிறார்). ஒரு கிளிக்குப் பிறந்த இரு கிளிகள் பற்றிய நிகழ்ச்சி இதுவாகும். ஒரு கிளியானது முனிவர்களாலும் மற்றொரு கிளியானது பசுமாம்ஸம் உண்பவர்களிடம் சென்று வளர்ந்தன. அவற்றில் முனிவர்களிடம் வளர்ந்த கிளி – எனக்கும் அந்தக் கிளிக்கும் ஒரே தாய், ஒரே தந்தை. நான் இந்த முனிவர்களால் இங்கு கொண்டு வரப்பட்டேன். அந்தக் கிளியானது மாட்டின் இறைச்சி உண்பவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. நான் அன்றாடம் இந்த முனிவர்களின் சொற்களைக் கேட்டபடி உள்ளேன். அந்தக் கிளியோ வேடர்களின் பேச்சைக் கேட்டபடி உள்ளது. நான் பேசும் பேச்சிற்கும், அந்தக் கிளி பேசும் பேச்சிற்கும் உள்ள வேறுபாட்டினை நீ உணர்ந்திருக்கலாம். ஆக நல்லொழுக்கமும் தீயொழுக்கமும் சேர்க்கையாலே வருகிறது – என்று கூறியது.

என்கிறபடியே வேடுவச்சேரியிலே கிளிபோலே அவர்கள் பழக்கி வைத்த பாசுரமே தனக்குப் பாசுரமாய், அவர்களுக்குப் பிறந்தவர்களைப் போலே அவர்கள் ஊணும் வ்ருத்தியுமே தனக்கு ஊணும் வ்ருத்தியுமாய், தன் பிறவிக்கு உரிய போகங்களில் ஆசார ஸம்ஸ்காராதிகளிலும் புதியது உண்ணாதே ராஜபோக விருத்தங்களான ஜுகுப்ஸித விஷயங்களிலே தனக்குப் பேறுமிழவும் ஹர்ஷசோகங்களுமாய், ராஜகுமாரனென்று தன்னடி அறிவார் சில ரிஷிப்ராயர் உண்டானாலும் அவர்களுக்குக் கிட்டவொண்ணாத அவஸ்தையையுடையவனாய் இப்படி ப்ராந்திஸித்த சபரத்வாத்யவஸ்தையோடே யாவஜ்ஜீவனம் நடக்கில் உத்தர ஜன்மங்களிலும் ஒரு யோக்யதை பெற விரகில்லாதபடியாய்த் தட்டுப்பட்டு நிற்குமாபோலே.

விளக்கம் – வேடர்களால் வளர்க்கப்பட்ட அந்தக் கிளி போன்றே இந்த ராஜ குமாரனும் அவர்கள் தனக்குக் கற்றுக் கொடுத்த பாஷையே தன்னுடைய பாஷையாகவும், அவர்கள் பேசுவது போன்றே தானும் பேசியும், அவர்களுக்குப் பிறந்தவர்கள் என்ன உணவு உட்கொண்பாரோ அதனையே தானும் உண்டபடியும் வாழ்ந்து வந்தான். தனது ராஜபோகங்கள், ஆசாரங்கள், ஸம்ப்ரதாயம் முதலியவற்றை அந்த ராஜகுமாரன் அறியவில்லை. ஒரு ராஜகுமாரன் எப்படி நடந்து கொள்வானோ அதற்கு மாறாக இவனது நன்மை–தீமைகள், இன்ப–துன்பங்கள் இருந்து வந்தன. அந்தக் காட்டில் இருந்த ஒரு சில முனிவர்களுக்கு, இவன் ஒரு ராஜகுமாரன் என்று தெரிந்திருந்தபோதிலும், அவர்கள் இவனைத் திருத்த முயன்றபோதும், இவன் அவர்களுக்கு அருகில் வராமலேயே இருந்தான். மற்றொரு பிறவி எடுக்கும்போது அதிலாவது உன்னதமான ஒரு பிறவியை எடுக்கவல்ல முயற்சி அற்றவனாகவே இருந்து வந்தான்.

இவனும் தேஹாத்மாபிமானாதிகளாலே தன்னுருக்கொடுத்து வேற்றுருக் கொண்டு நிற்க.

விளக்கம் – தனது உண்மையான ஸ்வபாவத்தை இழந்து, வேறு ஸ்வபாவம் எடுத்த ராஜகுமாரனின் கதி இவ்வாறு ஆனது. இது போன்றே ஜீவன் – தான் உள்ள உடலும், தானும் ஒன்றே – என்ற மயக்கம் காரணமாக தன்னுடைய ஸ்வபாவத்தை இழக்கிறான்.

அந்த ராஜகுமாரனுடைய லக்ஷணாதிகளாலே ஜாதி விசேஷத்தை அறிவார் சில தார்மிகர் ஒரு விரகாலே இவனை மீட்கப்பெற்று அபிமானிக்க இவனுக்கு வந்தேறியான ஜாத்யந்தராபிமானத்தை வழிவிலக்கி த்ருஷ்டாத்ருஷ்ட ஸம்ஸ்காராதிகளாலே உத்தரோத்தர போக ததுபாயங்களுக்கு யோக்யனாம்படி விரகு செய்து, இவனுக்கு ஸ்வஜாத்யனுரூபமான குணவ்ருத்தங்களைத் தங்கள் உபதேச அனுஷ்டானங்களாலே குடிபுகரவிட்டு, இவனுக்கு அநேக தோஷ த்ருஷ்டங்களான சபராதி போக்ய க்ஷுத்ர விஷயங்களை அருவருப்பித்து, ராஜாதி போக்யங்களான

அதிசயித புருஷார்த்தங்களை ஆய்ந்து எடுக்கவல்ல அளவுடைமையை உண்டாக்கி நிறுத்துமாபோலே.

விளக்கம் – இந்த ராஜகுமாரனின் தேஜஸ் போன்ற லக்ஷணங்கள் மூலம் அவனுடைய அரச பிறப்பை உணர்ந்த சில மஹான்கள் (தார்மிகர் என்றார்), அவனை ஏதேனும் ஒரு உபாயம் செய்து மீட்க மனம் கொண்டனர். அவன் தன்னை வேடுவர்களில் ஒருவனாக எண்ணியிருந்த தவறான எண்ணத்தை முதலில் மாற்றினர். அதன் பின்னர் அவர்கள் மூலமாக சரியானபடி நீராடும் வழக்கம், ஆடை உடுத்தும் வழக்கம், ஆசாரம் போன்றவைகளை அறிந்தான். இதன் மூலம், ராஜகுமாரன் ஒருவன் அனுபவிக்கத் தகுந்த விஷயங்களைத் தானும் அனுபவிக்கும் தகுதிகளைப் பெற்றான். அந்த விஷயங்களை அனுபவிக்கும் உபாயங்களையும் அறிந்தான். அரசகுமாரனுக்கு ஏற்ற உருவம், குணங்கள் என்ன என்பதை அவனுக்கு உபதேசங்கள் மூலமாகவும் எடுத்துக்காட்டுக்கள் மூலமாகவும் உணர்த்தினர். இதன் மூலம் அவன் தான் கைக்கொண்டிருந்த தாழ்வான வாழ்க்கையை வெறுக்கும்படியும், அவனுக்கே அவை அறுவருப்பாக உள்ளபடியும் செய்தனர். இதன் மூலம் அவன் ராஜகுமார வாழ்க்கைக்கு ஏற்ற ஞானம் பெறும்படிச் செய்தனர், உயர்ந்த புருஷார்த்தங்களை தேர்ந்தெடுக்கும் அறிவையும் புகட்டினர்.

இவ்வாத்மாவுக்குச் சில தார்மிகர் பித்ராதி முகேந நொடித்து,

புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:
சரீராக்ருதிபேதா: அஸ்து பூயைதே கர்மயோநய:

என்கிறபடியே உரு வியந்தவிந்நிலைமையை உணர்த்தி, அதுக்கு அநுரூபமான புருஷார்த்த ததுபாயங்களிலே அந்வயிக்கலாம்படி விரகு செய்து, உடம்புதின்றார்படியன்றிக்கே ஒரு வெளிச்சிறப்புடையார்க்கு வரும் குணவ்ருத்தங்களை உண்டாக்கி ஹேயோபாதேய விபாகக்ஷமனுமாக்கி நிறுத்தினவளவிலே,

விளக்கம் – இந்த ஜீவனுக்கு அவனது பித்ருக்கள் மூலம் சில நல்லோர்களின் (தார்மிகர்) தொடர்பு கிட்டுகிறது. அவர்கள் அந்த ஜீவனுக்குக் கீழே உள்ள விஷ்ணு புராணக் கருத்தை உணர்த்துகின்றனர். அந்த விஷ்ணு புராண வரியானது(2–13–98):

புமாந் ந தேவோ ந நரோ ந பசுர் ந ச பாதப:
சரீராக்ருதிபேதா: அஸ்து பூயைதே கர்மயோநய:

இதன் பொருள் – ஜீவன் என்பவன் தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், விலங்கும் அல்லன், மரமும் அல்லன். உடல் உருவங்களிலும் அமைப்பிலும் உள்ள இந்த வேறுபாடுகள் அவரவர் கர்மங்களினால் உண்டானவையாகும். இது போன்ற பல வரிகளின் மூலம் அவனுக்கு (ஜீவனுக்கு) உடலைக் காட்டிலும் வேறுபட்டது ஜீவன் என்று உணர்த்துகின்றனர். அதன் பின்னர் ஜீவனின் ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தங்கள் என்ன என்று உணர்த்தி, அந்தப் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்களையும் உபதேசிக்கின்றனர். அவனுக்கு – சிறந்த ஞானம் உள்ளவர்களிடம் மட்டுமே காணப்பட்டும், ஆத்மா என்பது உடலைக் காட்டிலும் வேறானது என்று அறியாதவர்களிடம்(இவர்களை உடம்புதின்றார் என்று கூறினார்) இல்லாதவையும் ஆகிய உயர்ந்த குணங்களை ஏற்படுத்துகின்றனர். மேலும் அவனுக்கு எதனை ஏற்க வேண்டும், எதனை விடவேண்டும் என்ற விவேகம் வளரும்படிச் செய்கின்றனர்.

இவனுடைய அடியுடைமையையும் சில தார்மிகரடியாக வந்த யோக்யதையும் அளவுடைமையையும் நேராகக் கண்டு பரமகாருணிகனான பரம சேஷியாலே ப்ரேரிதராய்த் தாங்களும் காருணிகோத்தமராயிருப்பார் சில தேசிகர்.

ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்த்விகை:
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்திஹேதவ:

என்கிறபடியே நேர்பட்டு.

விளக்கம் – அந்த ராஜகுமாரன் நன்மையின் இருப்பிடமாக மாறியுள்ளதையும், அவனுக்குச் சில நல்லோர்கள் செய்த நன்மைகளையும், அவனது அறிவையும், கருணையே வடிவமான பரம்பொருளால் தூண்டப்பட்ட சில ஆசார்யர்கள் காண்கின்றனர். இவர்கள் பரம்பொருளைப் போன்றே கருணை உள்ளவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட ஆசார்யர்களின் தொடர்பு எவ்விதம் ஏற்படும் என்பதைக் கீழே உள்ள வரிகள் மூலம் உணரலாம்.

ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா
விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்த்விகை:
ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்திஹேதவ:

இதன் பொருள் – பகவானின் அன்பு, புண்ணிய கர்ம பலன், பகவானின் கருணைப் பார்வை, எம்பெருமானிடம் வெறுப்பு இல்லாமை, எம்பெருமானைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம், நல்லவர்களுடன்(ஸத்வ குணம் உள்ளவர்களுடன்) உரையாடுதல் ஆகிய ஆறும் ஒருவனை நல்லதோர் ஆசார்யனிடம் கொண்டு சேர்க்கும் காரணங்களாகும்.

அந்த ராஜகுமாரனுக்குச் சில ராஜாந்தரங்கர் நேர்பட்டு பிறவியை உணர்த்தி மேலுள்ள ப்ரியதமங்களையும் ஹிததமங்களையும் தெளிவித்து ஒரு விரகாலே அந்த ராஜாவுக்கும் ராஜகுமாரனுக்கும் பரஸ்பர ஸம்ச்லேஷாகாங்க்ஷையை உத்தம்பிக்குமாப்போல, இவனுக்கும்

நாயம் தேவோ ந மர்த்யா வா ந திர்யக் ஸ்தாவரோ அபி வா
ஞானானந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மன: என்றும்
தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மன: பரமாத்மன: என்றும்

ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே – பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதுஞ்சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய ஸ்ரீய:பதி நாராயணனுடனே குடல் துவக்கைத் தெளிவித்து, இவனுக்கு தத்ப்ராப்த்யுபாயங்களிலே முயன்று இவன் பெறுகிற பேறே தங்களுக்குப் பொன்னுலகையும் புவனி முழுவதையுமாளுகையாக உகந்து, அதடியாக அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும் தேனுவைப் போலே இத்தேசிகர் இவ்வாத்மாவுக்கு அஜ்ஞான ஸம்சய விபர்யயங்கள் தீரவேண்டுமென்று மிகுந்து குறைவறச் சுரக்கும் பாசுரங்களைக் கொண்டு தத்த்வேந யச்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ இத்யாதிகளிற்படியே ஈச்வரனுடையவும் ஈசிதவ்யங்களுடையவும் ஸ்வரூப ஸ்வபாவ ஸம்பந்தங்களும், இவற்றின் த்யாஜ்யோபாதேயங்களான இவற்றினுடைய உபாயங்களும், இவற்றின் கதிப்ரகாரங்களும், உக்தாநுக்தங்களான மோக்ஷ விரோதிகளுமாகிற இவ்வர்த்தங்கள் முமுக்ஷுவான இவ்வத்மாவுக்கு ஞாதவ்யங்கள். இவ்வர்த்தங்கள் எல்லாம் அத்யாத்மவிஷய சப்தராசியில் ஸாரதமமான ரஹஸ்யத்திலே ப்ரதிதந்த்ர ஸாரோத்தாரேண ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

விளக்கம் – அவர்கள் ராஜகுமாரனுக்கு அவனுடைய பிறப்பைப் பற்றிக் கூறி, அவனுடைய பிறவிக்கு ஏற்ற நன்மை எது என்றும், அதனை அடையும் உபாயங்கள் என்ன என்றும் உணர்த்துகின்றனர். மேலும் அவர்கள் ராஜாவும் ராஜகுமாரனும் இணைவதற்காக உள்ள அனைத்து வழிகளையும் முயல்கின்றனர். இதனைப் போன்றே ஜீவனுக்கும் ஆசார்யர்கள் மூலமாக நடக்கிறது. கீழே உள்ள சில வரிகளையும் அதன் பொருள்களையும் காண்க:

நாயம் தேவோ ந மர்த்யா வா ந திர்யக் ஸ்தாவரோ அபி வா ஞானானந்தமயஸ்த்வாத்மா சேஷோ ஹி பரமாத்மன: – ஜீவன் என்பவன் தேவனும் அல்லன், மனிதனும் அல்லன், விலங்கும் அல்லன், மரமும் அல்லன். அவன் ஞானம் மற்றும் ஆனந்தமே தனது ஸ்வரூபமாக உடையவன். அவன் பரம்பொருளுக்கு அடிமையாக உள்ளான். அவனை அண்டியே உள்ளான். அவனது கைங்கர்யதிற்காகவே உள்ளான் (சேஷன்).

மந்த்ரராஜபதம் – தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹி ஆத்மன: பரமாத்மன: – (சிவன் கூறுவது) பரம்பொருளின் ஸ்வரூபம் காரணமாக ஜீவன் அவனது அடிமையாக உள்ளான்.

நாச்சியார் திருமொழியில்(11–3) கூறுவது போன்று – பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்கு ஆதும் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய (திருவரங்கச்செல்வனார்) – என்னும்படி உள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனான நாராயணனுக்கும் ஜீவனுக்கும் இடையே உள்ள உறவை (பிறப்பால் வந்த தொடர்பு) ஆசார்யர்கள் உபதேசிகின்றனர். அந்த ஆசார்யர்கள், ஜீவன் பரம்பொருளை அடைதற்குப் பெரிதும் முயல்வர். இவ்விதம் அந்த ஜீவன் பெருகின்ற பேறு மூலம் தங்களுக்கே நித்ய விபூதியும், இந்த உலகம் முழுவதும் கிட்டியதாக எண்ணுவர். அன்று பிறந்த கன்றுக்குப் பசுவானது தானே பாலைச் சுரப்பது போல், அவன் மீது அன்பு வைக்கின்றனர். அவனுடைய அஜ்ஞானம், சந்தேகம் மற்றும் தவறான ஞானம் (தேஹமே ஆத்மா என்ற எண்ணம் போன்றவை) ஆகியவற்றை, மிகவும் அதிகமாகவும் குறைவாகவும் இல்லாமல் உள்ள தங்கள் உபதேசங்கள் மூலம் விலக்குகின்றனர். ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில்(4) – தத்த்வேந யச்சிதசிதீச்வர தத்ஸ்வபாவ – எந்த பராசரர் ஸத் சித் ஈச்வரம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறாரோ – கூறுவது போன்று, ஆசார்யர்கள் ஜீவனுக்குச் சேதன–அசேதனங்களை நியமிப்பவனான பரம்பொருளின் தன்மைகளை விளக்குகின்றனர். மேலும் அவர்கள் – சேதனம், அசேதனம் ஆகியவற்றின் தன்மைகளை விளக்கி, அவற்றின் இடையே உள்ள உறவையும் விளக்குகின்றனர், இந்த ஸம்ஸாரத்தில் அடையும் சுகம்–துக்கம் ஆகியவற்றை விளக்குகின்றனர்,இந்தப் பிடியிலிருந்து வெளியேறும் மோக்ஷம் பற்றியும், அதனை அடையும் உபாயங்கள் பற்றும் கூறுகின்றனர், ஜீவன் செல்லும் மார்க்கங்கள், அந்த வழியில் சென்று அடையப்படும் மோக்ஷத்தினை தடுக்கும் தடைகள் என்னும் அர்த்தபஞ்சகத்தை விளக்குகின்றனர். இவை அனைத்தும் மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் (முமுக்ஷு) அறிய வேண்டியதாகும். இவை அனைத்தும் ரஹஸ்யத்ரயத்தில் கூறப்படுகின்றன. இவையே ஜீவன்–ஈச்வரன் ஆகிய இரண்டைப் பற்றியும் கூறும் இடங்களின் சாரமாக உள்ளது.

திருவுடன் வந்த செழுமணிபோல் திருமால் இதயம்
மருவு இடம் என்ன மலரடி சூடும் வகை பெறும் நாம்
கருவுடன் வந்த கடுவினையாற்றில் விழுந்தொழுகாது
அருவுடனைந்தறிவார் அருள் செய்ய அமைந்தனரே.

பொருள் – நாம் மஹவிஷ்ணுவின் திருமார்பில் உள்ளதும், திருபாற்கடலைக் கடைந்த போது மஹாலக்ஷ்மியுடன் வெளிப்பட்டதும் ஆகிய கௌஸ்துபம் போன்று அவன் திருமார்பில் இருக்கும் தகுதி உடையவர்களே, மேலும் தாமரை போன்ற அவனது திருவடிகளை நமது தலையில் க்ரீடம் போன்று அணிந்து கொள்ளும் தகுதியும் உள்ளவர்கள் ஆவோம். இத்தகைய தகுதி உள்ள நாம், நமது கர்மங்கள் என்ற வெள்ளத்தில் தாயின் கர்ப்பத்தில் உள்ள போதே விழுந்து விடுகிறோம். ஆனால் நாம் அந்த வெள்ளத்தில் அடித்து சென்று விடாமல், அர்த்தபஞ்சகம் என்ற ஞானம் பெற்ற ஆசார்யர்கள் நம்மைக் காக்கவே அவதரித்தனர்.

கர்மாவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷமிஹாநாதி சித்ரப்ரவாஹே
தத்தத்காலே விபக்திர்பவதி ஹி விவிதா ஸர்வஸித்தாந்த ஸித்தா
தல்லப்த ஸ்வாவகாச ப்ரதபகுரு க்ருபா ம்ருஹ்யமாண: கதாசித்
முக்தைச்வர்ய அந்த ஸம்பத் நிதிரபி பவிதா கச்சிதித்தம் விபச்சித்

பொருள் – இந்த உலகில் ஸம்ஸாரத்தில் சிக்கிய ஒவ்வொரு ஜீவனுக்கும், கர்மம்–அறியாமை போன்ற வினைகள் சக்கரம் போன்று மீண்டும் மீண்டும் தொடர்ந்தபடி இருக்கும், எண்ணற்ற ஆண்டுகளாக இந்த நிலை நீடிக்கும், பல ஸித்தாந்தங்கள் கூறுவது என்னவெனில் – சரியான காலம் வரும்போது, பூர்வ கர்மங்கள் பலன் அளிக்கும் – என்பதாகும். இப்படிப் பலன் அளிக்கும் காலம் வரும்போது, முதல் ஆசார்யனான பகவான், அந்த ஜீவனைப் பிடித்து, தனது கருணையை அவன் மீது பொழிகிறான். ஆனால் இப்படிப்பட்ட ஜீவன்கள் மிகவும் குறைவே ஆகும். அவர்கள் ஐச்வர்யத்திற்கு இருப்பிடமாக மாறுகின்றனர். இவர்கள் பெற்ற பேறானது, நித்யசூரிகள் பெறும் கைங்கர்யம் போன்றதாகும்.

உபோத்காத அதிகாரம் முற்றிற்று

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
## (பகுதி – 2)

4. மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது.

அவதாரிகை – இப்படி, தன்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோவென்ன அருளிச் செய்கிறார், மந்த்ரத்திலும் என்று தொடங்கி.

விளக்கம் – இவ்விதம் தன்னிடம் ப்ரேமை உள்ளவனுக்கு இந்த மந்திரம் வேண்டியதை அளிக்குமா என்ற கேள்விக்கு விடையளிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான இம் மந்த்ரந்தன்னிலும், சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு வாச்யவஸ்துவாயிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்திலும் – தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் – என்கிறபடியே இம்மந்த்ரம் ஆசார்யாதீநமாயிருப்ப தொன்றாகையாலே இத்தை யதாப்ரதிபத்தியுக்தனாய்க் கொண்டு, தனக்கு உபகரித்த ஆசார்ய விஷயத்திலும் தத்தத்வைலக்ஷண்யாநுரூபகமாக ப்ரேமம் அதிசயேந உண்டானால், இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாவதென்கை. மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதம ஸாதநம் – என்னக் கடவதிறே.

விளக்கம்

- இந்த மந்த்ரம் அறிய வேண்டிய உண்மைகளை விளக்குவதால் அதன் மீது அளவு கடந்த அன்பு இருத்தல் வேண்டும்.
- சேஷி (எஜமானன்), சரண்யன் (அடைக்கலமாக உள்ளவன்), ப்ராப்யம் (அடையப்படும் இலக்கு) ஆகிய மூன்றுமாக உள்ள பகவானைப் பற்றி இந்த மந்த்ரம் கூறுவதால் இதன் மீது அன்புடன் இருக்க வேண்டும்.
- தந்மந்த்ரம் ப்ராஹ்மணாம் – அனைத்தும் தெய்வத்திற்குக் கட்டுப்பட்டது, தெய்வம் மந்த்ரத்திற்குக் கட்டுப்பட்டது, மந்த்ரம் ஆசார்யனுக்குக் கட்டுப்பட்டது – என்று கூறப்பட்டதால், இந்த மந்த்ரத்தை எந்த அளவு நேசிக்கிறோமோ, அந்த அளவு அன்பானது இந்த மந்த்ரத்தை உபதேஸித்த ஆசார்யன் விஷயத்திலும் இருக்கவேண்டும்.

இது போன்ற மூன்று விஷயங்களில் ஒருவனுக்கு அன்பு இருக்குமானால், அவனுக்கு இந்த மந்த்ரம் அவன் விரும்பியதை அளிக்கும். விஷ்ணு தத்வம் – மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸா ஹி ப்ரதம ஸாதநம் – மந்த்ரம், அந்த மந்த்ரத்தால் ஆராதிக்கப்படும் தேவதை, அந்த மந்த்ரத்தை உபதேஸம் செய்த ஆசார்யன் ஆகிய மூன்றும் பக்திக்கு முக்கியமான சாதனங்களாக உள்ளதால், இவை மூன்றின் மீதும் ஆழ்ந்த பக்தி வைக்கவேண்டும் – என்று கூறியது காண்க.

5. ஸம்ஸாரிகள் தங்களையும் ஈச்வரனையும் மறந்து, ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமெனகிற இழவுமின்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.

அவதாரிகை – இனி, இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகாரகதந முகத்தாலே இதினுடைய அப்ரதிம வைபவத்தை அருளிச் செய்கிறார் – ஸம்ஸாரிகள் – என்று தொடங்கி,

விளக்கம் – இந்த மந்த்ரம், இந்த உலகத்தில் எவ்விதம் தோன்றியது என்று கூறுவதன் மூலம், இந்த மந்த்ரத்தின் உயர்ந்த வைபவத்தை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – ஸம்ஸாரிகளாகிறார் அநாத்யசித்ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவசராய் ஜந்மமரணாதி க்லேசபாகிகளாய்த் திரிகிற பத்தசேதனர். (தங்களையும் ஈச்வரனையும் மறந்து) என்றது – தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான பகவத் சேஷத்வத்தை லக்ஷணமாக உடையராயிருக்கிற தங்களையும் பதிம்விச்வஸ்ய, ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம் இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு நிருபாதிக சேஷியாயிருக்கிற ஈச்வரனையும் அறியாதேயென்கை.

விளக்கம் – ஸம்ஸாரிகள் என்றால் எல்லையற்ற காலமாக அசித் பொருள்களுடன் கொண்ட தொடர்பால் அறியாமை, கர்மவாசனை, ஆசை ஆகியவை ஏற்பட்டு, இதனால் பிறப்பு–இறப்பு என்ற சுழற்சியில் சிக்குண்டவர்கள் ஆவர். (தங்களையும் ஈச்வரனையும் மறந்து) என்றால் – அவர்கள் தங்கள் இயல்பாகவே பகவானுக்கு அடிமை என்பதை அறியாதவர்கள் – என்பதாகும். இதனை ஹாரித ஸ்ம்ருதி – தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: நாந்யதா லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச – அனைத்து ஜீவன்களும் தங்கள் இயல்பாகவே பரம்பொருளின் அடிமைகள் ஆவர், இதனைத் தவிர அவர்கள் ஸம்ஸாரத்தில் உள்ளபோதும் மோக்ஷம் அடைந்தபோதும் வேறு இலக்கணம் அவர்களுக்கு இல்லை – என்றது. மஹா நாராயண உபனிஷத் – பதிம் விச்வஸ்ய – நாராயணனே அனைத்தின் நாயகன் என்றும், விஷ்ணுதத்வம் – ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம் – அவனுக்கு உடைமையாய் உள்ள தன்மை ஜீவனுக்கும், ஜீவனை உடையவனாய் இருக்கும் தன்மை ப்ரஹ்மத்திற்கும் இயல்பாகவே உள்ளது – என்றும் கூறப்பட்டது. இப்படியாக தங்களின் இயல்பான எஜமானனாக பரம்பொருள் உள்ளான் என்பதை அறியாமல் உள்ளனர்.

ஆனால், அறியாமலென்னாதே மறந்தென்பான் என்? முன் ஒருகால் நினைத்துப் பின்பு அந்நினைவுக்கு ப்ரச்யுதி வந்தவிடத்திலிறே மறந்து என்னாலாவது என்னில்: மறந்தேனுன்னை முன்னம் என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தை உணர்ந்தால் முன்பு நினைத்திருந்த அர்த்தத்தை மறந்தாற்போலே இருக்கும் ஸம்பந்தத்தில் உறைப்பை நினைத்து அருளிச் செய்தாராமித்தனை.

விளக்கம் – ஆனால், ஸம்ஸாரிகள் இதனை அறியவில்லை என்று கூறுவதற்குப் பதிலாக, மறந்து விட்டனர் என்று கூறுவது ஏன்? மறப்பது என்றால் ஒரு விஷயத்தைப் பற்றி முன்பு அறிந்ததை, சிறிது காலம் கழித்து அதனைப் பற்றிய ஞானம் இல்லாமல் போவது என்று அல்லவா பொருள் – என ஒரு சந்தேகம் எழலாம்? இவ்விதம் கூறுவது ஏன் என்றால் – தனக்கும் எம்பெருமானுக்கும் உள்ள உறவு இயல்பானதாக உள்ளதால், அதனை இப்போது ஒருவன் உணர்ந்தால் முன்னர் அறிந்து மறந்ததை இப்போது நினைவு கூர்ந்தது போன்றது அல்லவோ? இதனை பெரிய திருமொழியில்(6–2–2) – மறந்தேன் உன்னை முன்னம் – என்று ஆழ்வார் கூறினார் அல்லவோ?

ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து என்றது. கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே வகுத்த சேஷியான ஈச்வர விஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் ப்ராபிக்கப் பெறாதேயென்கை. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், அதுக்கிட்டுப் பிறந்து வைத்துக் கிட்டப் பெறாமல் கிடந்தபடியையும் நினைத்து, இழந்து என்கிறார். இழந்தோமென்கிற இழவுமின்றிகே என்றது

ஸ்வஸ்வரூபபரஸ்வரூப ஞானமும் புருஷார்த்த ஞானமும் இல்லாமையாலே. ஸ்வசேஷத்வாநுரூபமான சேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தை இழந்தோ மென்கிற அலாப க்லேசந்தானுமின்றிக்கே என்கை.

விளக்கம் – (ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து) என்பதன் மூலம் மேலே கூறிய அறியாமையால் நம்முடைய எஜமானனாக உள்ள எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்தல் என்ற உயர்ந்த புருஷார்த்தத்தை இழப்பது என்பதாகும். அந்தக் கைங்கர்யத்தைச் செய்வதற்காகவே இந்த மண்ணில் பிறந்தபோதும், அதனை மறந்து எண்ணற்ற காலம் இருந்ததை – இழந்து – என்று கூறினார். (இழந்தோம் என்கிற இழவும் இன்றிக்கே) – என்பதன் மூலம் தன்னுடைய ஸ்வரூபம், எம்பெருமானின் ஸ்வரூபம், அடையப்படவேண்டிய பேறு ஆகியவற்றைப் பற்றிய ஞானம் இல்லாமல் இருப்பதைக் கூறினார். இந்த அறிவு இல்லாததால், தாங்கள் எப்படிப்பட்ட உயர்ந்த இலக்கை இழந்து நிற்கிறோம் என்ற வருத்தம் இல்லாமல் உள்ளனர் என்று கருத்து. தங்கள் மனதில் – நம்முடைய அடிமை ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி நமது எஜமானனாக உள்ள எம்பெருமானுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யம் என்ற செல்வத்தை இழந்து நிற்கிறோம் – என்ற வருத்தம் சிறிதும் இல்லாமல் உள்ளனர்.

ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட என்றது ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்தக்லேச பாஜனம் என்கிறபடியே அநந்தக்லேசபாஜனமாய், ஒருவராலும், ஸ்வயத்நத்தால் கரை காண அரிதாம்படியிருக்கிற ஸம்ஸாரமாகிற மஹா ஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க் கொண்டு க்லேசப்படவென்கை. இத்தால், தங்களையும் ஈச்வரனையும் அறியாமையாலும், புருஷார்த்தத்தை அறியாமையாலும், ஸம்ஸாரஸாகரத்துக்குள்ளே கிடந்து நோவுபடா நிற்க விரோதியான ஸம்ஸாரந்தன்னையும் தந்நிஸ்தரணோபாயத்தையும் அறியாமையாலும், ஜ்ஞாதவ்யமான அர்த்தபஞ்சகத்திலும் ஒன்றையும் அறியாமற் கிடந்தார்களென்கை. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் இத்யாதிப்படியே ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ப்ரதிபாதிப்பது அர்த்தபஞ்சகத்தையுமிறே. இவ்வர்த்தங்களை இவர்களுக்கு ஸங்க்ரஹமாக அறிவிக்கைக்காக, ஸகல சாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை ஸர்வேச்வரன் வெளியிட்ட ப்ரகாரத்தைச் சொல்லுகிறது மேல்.

விளக்கம் – (ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட) அளவற்ற துன்பத்திற்குக் காரணமாகவும், தனது முயற்சியைக் கொண்டு கரை காண இயலாததும் ஆகிய ஸம்ஸாரம் என்ற கடலில் மூழ்கியபடி உள்ளனர். நம்முடைய முயற்சி மூலம் இதன் கரையைக் காணவே இயலாது என்பதை ஜிதந்தே ஸ்தோத்ரம்(1–4) – ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்த க்லேச பாஜனம் – அளவற்ற துன்பங்களும் கொடியதுமாக உள்ள ஸம்ஸாரம் என்ற கடல் – என்று கூறியது. இதனால் தங்களைத் தீண்டும் மூன்று விதமான துன்பங்களால்(ஆத்யாத்மிகம் – நோய்களால் வரும் துன்பம், ஆதிபௌதிகம் – விலங்குகளால் ஏற்படும் துன்பம், ஆதிதைவிகம் – தெய்வத்தால் வரும் மழை இடி போன்ற துன்பம்) பாதிக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் – தங்களையும் அறியவில்லை, ஈச்வரனையும் அறியவில்லை, கைங்கர்ய பேற்றையும் அறியவில்லை, ஸம்ஸாரம் என்ற கடலில் துன்பப்படும் போதும் அந்த ஸம்ஸாரமே தங்களின் கைங்கர்யத்திற்குத் தடையாக உள்ளது என்பதையும் அறியவில்லை, இவற்றிலிருந்து வெளிவரும் உபாயத்தையும் அறியவில்லை. ஆக அர்த்தபஞ்சகம் என்று கூறப்படும் தத்துவங்களை அறியாமல் உள்ளனர். ஹாரித ஸ்ம்ருதி(8–141) – ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் – அடையப்படவேண்டிய பரம்பொருளின் இயல்பு – என்று கூறுவது போன்று, அனைத்து சாஸ்திரங்களும் அர்த்தபஞ்சகத்தையே கூறுகின்றன(அர்த்தபஞ்சகம் = பரம்பொருளின் இயல்பு, ஜீவனின் இயல்பு, பரம்பொருளை அடையும் வழி, பரம்பொருளை அடைந்தபின் கிட்டும் பயன், பரம்பொருளை அடைய ஏற்படும் தடை). இந்த அர்த்தபஞ்சகத்தை நாம் எளிதாக அறியும் பொருட்டு, அனைத்து சாஸ்திரங்களிலும் கூறப்பட்ட கருத்துக்களின் சுருக்கமாக உள்ள திருமந்த்ரத்தை அருளிச் செய்தான்.

ஸர்வேச்வரன் தன் க்ருபையாலே என்றது – ஈசேசிதவ்யஸம்பந்தாத் அநிதம்ப்ரதமாதபி என்கிறபடியே அநாதியாக ஸர்வரோடுமுண்டான ஈசேசிதவ்ய ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமான். ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே என்கிறபடியே

இவர்கள் படுகிற துக்கதர்சநமாத்ரத்தாலுண்டான தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே என்கை.

விளக்கம் – இதனை எப்படி அருளிச் செய்தான் என்பதை அடுத்து கூறுகிறார். (ஸர்வேச்வரன் தன் க்ருபையால்) – ஸர்வேச்வரன் தனது கருணையால் அருளினான். லக்ஷ்மி தந்திரம்(17–7) – ஈசேசிதவ்ய ஸம்பந்தாத் அநிதம் ப்ரதமாதபி – ஈச்வரனுக்கும் ஜீவாத்மாவுக்கும் எல்லையற்ற காலமாக எஜமான–அடிமை உறவு உள்ளது – என்று கூறியபடி, எல்லையற்ற காலம் தனக்கு உடைமையாய் இருக்கும் ஜீவன்களைத் தனக்கு உடையவனாய் உள்ளவன் எம்பெருமான்(ஈசேசிதவ்ய சம்பந்தம்) என்ற பெருமை உள்ளவன் ஆவான். இந்தக் கருணை என்பது எப்படிப்பட்டது என்றால், நமது துன்பத்தைக் கண்டவுடன், எந்தவித காரணமும் இல்லாமல் இயல்பாகவே(நிர்ஹேதுக க்ருபை) வருவதாகும். இதனை அஹிர்புத்ய ஸம்ஹிதை(14–28) – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்ய மாணே ஸ்வகர்மபி: ஜீவே துக்கா குலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே – தனது கர்மம் காரணமாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுழன்று துன்பப்படும் ஜீவன் மீது விஷ்ணுவிற்கு வர்ணிக்க இயலாத அளவு கருணை உண்டாகிறது – என்று கூறுகிறது.

இவர்கள் தன்னையறிந்து கரைமரம்சேரும்படி என்றது – இப்படி ஸம்ஸார ஸாகரத்திலே கிடந்து நோவுபடுகிற இவர்கள் த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: என்றும், ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம் என்றும் சொல்லுகிறபடியே, ஸம்ஸார நிஸ்தரணோபாயபூதனான தன்னையறிந்து ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப்படும்படி என்கை.

விளக்கம் – (இவர்கள் தன்னை அறிந்து கரை மரம் சேறும் படி) – இவ்விதம் ஸம்ஸாரக் கடலில் கிடந்து தத்தளிக்கும் இவர்கள், அதனில் இருந்து வெளிவரும் உபாயமாக உள்ள தன்னை அறிந்து அந்தக் கடலைக் கடக்கும்படி என்று கருத்து. இதனை ஜிதந்தே ஸ்தோத்ரம்(1–4) – த்வாம் ஏவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண: – உன்னையே சரணம் என்று அடைந்து ஸம்ஸாரக் கடலைக் கடக்கின்றனர் – என்றும், விஷ்ணு தர்மம்(1–59) – ஸம்ஸார அர்ணவமக்நாநாம் விஷயா க்ராந்த சேதஸாம் விஷ்ணு போதம் விநா நாந்யத் கிஞ்சித் அஸ்தி பராயணம் – ஸம்ஸார கடலில் சிக்கி, உலகவிஷயங்களால் புலன்களும் மனமும், பீடிக்கப்பட்டவர்களுக்கு விஷ்ணு என்ற ஓடத்தை தவிர கரை ஏறும் வழி வேறு இல்லை – என்றும் கூறப்பட்டது.

தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று என்றது – நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமை விரித்தவன் என்கிறபடியே நரநாராயணரூபேண அவதரித்து நரனான தான் சிஷ்யனுமாய், நாராயணனான தான் ஆசார்யனுமாய் நின்று என்கை. திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான் என்றது – ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமாய் அந்த சாஸ்த்ர தாத்பர்யமான அர்த்தபஞ்சகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நிற்கும் திருமந்த்ரத்தை ப்ரகாசிப்பித்தருளினான் என்கை.

விளக்கம் – (தானே சிஷ்யனும் ஆசார்யனுமாய் நின்று) – பெரிய திருமொழி(10–6) – நர நாராயணனாய் உலகத்து அறநூல் சிங்காமை விரித்தவன் – என்னும்படி நர–நாராயணனாகத் தானே அவதரித்து, தானே நரன் என்ற சிஷ்யனாகவும் தானே நாராயணன் என்ற ஆசார்யனுமாகவும் நின்றதைக் கூறினார். (திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்) – அனைத்து சாஸ்திரங்களின் சுருக்கமாக உள்ளதும், அந்தச் சாஸ்திரங்களை விளக்கும் அர்த்தபஞ்சகத்தையும் விளக்குவதும் ஆகிய திருமந்த்ரத்தை வெளியிட்டான்.

அருளிச்செய்தானென்னாதே வெளியிட்டருளினானென்றது, இப்போதுதான் ஒன்றை நியமித்துச் சொன்னானல்லன். அனாதியானத்தை ப்ரகாசிப்பித்தானித்தனை என்னுமிடமும், அதி குஹ்யமாயுள்ளத்தை இவர்கள் துர்க்கதி கண்டு ஸஹிக்க மாட்டாமையாலே ப்ரகாசிப்பித்தானென்னுமிடமும் தோற்றுகைக்காக.

விளக்கம் – அருளிச் செய்தான் என்று கூறாமல், வெளியிட்டான் என்று ஏன் கூறவேண்டும்? அருளிச் செய்தான் – என்று கூறினால், இதுவரை இல்லாத ஒன்றை இப்போது புதிதாகக் கூறினான் என்று தோன்றி விடும். ஆகவே எண்ணற்ற காலமாக இருந்து வருவதை வெளிப்படுத்தினான் என்று உணர்த்தவே இவ்விதமாகக்

கூறினார். மேலும், மிகவும் ரஹஸ்யமாக உள்ள இந்த மந்த்ரத்தை, இவர்களது துன்பம் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல் வெளியிட்டான் – என்ற இரு காரணங்களால் வெளியிட்டான் என்று கூறினார்.

6. சிஷ்யனாய் நின்றது, சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக.

அவதாரிகை – ஆனால், ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளிவிட அமையாதோ? சிஷ்யனாய் நின்றது எதுக்காக? என்ன, அருளிச் செய்கிறார் சிஷ்யனாய் என்று தொடங்கி.

விளக்கம் – ஆசார்யனாக நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டால் போதுமானது அல்லவோ? சிஷ்யனாயும் ஏன் இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளின அளவன்றிக்கே தானே சிஷ்யனுமாய்க்கொண்டு நின்றது, ஆஸ்திகோ தர்ம சீலச்ச சீலவாந் வைஷ்ணவச்சுசி: கம்பீரச்சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே, சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத:, ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ்தத்வபோதாபிலாஷீ சுச்ரூஷுஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ: சாந்தோ தாந்தோ அநஸூயுச் சரணமுபகதச் சாஸ்த்ரவிச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ் தத்வதச்சிக்ஷணீய: இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளும், ஸாத்யாந்தர நிவ்ருத்தியும், பலஸாதந சுச்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையும் உடையனாயிருக்கையுமாகிற சிஷ்யலக்ஷணம் லோகத்திலுள்ளார் அறியாமையாலே, அத்தை ஸ்வாநுஷ்டாநத்தாலே அறிவிக்கைக்காக என்கை. உபதேசத்தாலே அறிவிக்குமளவில், ஸ்வோத்கர்ஷம் தேடிக்கொள்ளவந்தானித்தனையென்று நினைக்கவுங் கூடும், அநுஷ்டாநத்தாலே அறிவிக்குமளவில், நமக்கும் இது வேணுமென்று விச்வஸித்துப் பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

விளக்கம் – அவன் ஆசார்யனாக நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டு அருளியதோடு நில்லாமல், தானே சிஷ்யனாகவும் நின்றது ஏன் என்றால் – இந்த உலகில் உள்ள மக்களுக்கு ஒரு சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்று தெரியவில்லை, ஆகவே தன்னைத் தானே சிஷ்யனாக நின்று உணர்த்தினான். சிஷ்யனின் லக்ஷணம் என்பது – பகவத் கைங்கர்யம் தவிர மற்ற விஷயங்களில் இருந்து விலகி நிற்பது, தனக்கு ஏற்ற பலனைப் பெறுவதில் ஈடுபடவேண்டிய ஸாதகங்களை அறிவது, ஸம்ஸாரத்தில் ஈடுபடாமல் இருப்பது, பணிவுடன் இருப்பது, பொறாமை இல்லாமல் இருப்பது ஆகியவை ஆகும். இதனைக் கீழே உள்ள பல வரிகளின் மூலம் அறியலாம்:

- ஆஸ்திகோ தர்ம சீலச்ச சீலவாந் வைஷ்ணவ: சுசி: கம்பீர: சதுரோ தீர: சிஷ்ய இத்யபீதீயதே – சாஸ்திரத்தில் நம்பிக்கை வைப்பவனும், அதில் கூறிய தர்மங்களின்படி நடக்கும் விருப்பம் உள்ளவனும், சிறந்த ஒழுக்கம் உள்ளவனும், விஷ்ணு பக்தி கொண்டவனும், தூய்மையானவனும், ஆசார்ய பக்தியில் எல்லை இல்லாதவனும், ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடையில் சிறந்தவனும், ஆசார்ய கைங்கர்யம் நிறைந்தவனும் ஆகிய ஒருவனே சிஷ்யன் எனப்படுவான்.

- ஜயஸம்ஹிதை – சரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ: கர்ம குணாநஸூந் குர்வர்த்தம் தாரயேத்யஸ்து ஸ சிஷ்யோ நேதர: ஸ்ம்ருத: – தனது உடல், பொருள், ஞானம், இருப்பிடம், செயல்கள், குணங்கள், ப்ராணன் ஆகிய அனைத்தும் தன்னுடைய ஆசார்யனுக்கே என்று யார் ஒருவன் உள்ளானோ அவனே சிஷ்யன் எனப்படுவான்.

- ந்யாஸ விம்சதி(7) – ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ் தத்வ போதாபிலாஷீ சுச்ரூஷுஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ: சாந்தோ தாந்தோ அநஸூயுச் சரணமுபகதச் சாஸ்த்ரவிச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதஸ் தத்வதச் சிக்ஷணீய: – சிறந்த ஞானம் உள்ளவன், ஸாதுக்களை மதிப்பவன், சிறந்த ஒழுக்கம் உள்ளவன்,

உண்மையான ஞானம் பெறுவதில் ஆர்வம் உள்ளவன், ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடைகளை விரும்புபவன், கர்வம் அற்றவன், ஆசார்யனின் திருவடிகளை வணங்குவதில் ஈடுபட்டவன், கேள்வி கேட்கும் நேரம் அறிந்து கேட்பவன், மன–புலனடக்கம் உள்ளவன், பொறமை இல்லாதவன், சாஸ்த்ரத்தில் நம்பிக்கை உள்ளவன், மேலே கூறப்பட்ட தகுதிகள் உள்ளனவா என்று ஆசார்யனால் சோதிக்கப்பட்டவன், ஆசார்யனின் உபகாரத்தை மறக்காதவன் இப்படிப்பட்டவனே உண்மையான சிஷ்யன் ஆவான்.

இதனை அவன் சிஷ்யனாய் இருக்காமல், ஆசார்யனாக மட்டுமே வந்து உபதேசம் செய்திருந்தால் பலரும் – இவன் தன்னுடைய மேன்மையை உணர்த்தவே இவ்விதம் செய்கிறான் – என்று கூறக்கூடும். மாறாக, தன்னுடைய நடவடிக்கை மூலம் சிஷ்யனாக இருந்தான் என்றால், அதனைக் கண்ட மக்கள் தங்களுக்கும் அந்த நிலை வேண்டும் என்று மாறிவிடுவார்கள். ஆகவே இவ்விதம் சிஷ்யனாயும் நின்றான்.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 2)

(காரார்வரையித்யாதி) – தாய்மார் தோழிமார் எல்லோரும் இத்துணிவு ஆகாதுகாண் என்று விலக்கா நிற்கச்செய்தே, விலக்காதாளொருத்தியைப் பெறுவதே என்று கொண்டாடுவாரைப்போலே, புருஷார்த்தங்கள் சொல்லவேண்டுகையாலே, அவை பரிக்ரஹித்த சேதநரைச் சொல்லவேண்டி, அவர்கள் வர்த்திக்கிற பூமியைச் சொல்லப்புக்கு, அவ்வழியாலே அதுக்கு அபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள்.

விளக்கம் – தனது தாய்மார்கள் மற்றும் தோழிமார்கள் ஆகிய அனைவரும் இவளிடம் – மடல் எடுக்கவேண்டாம், இது உனக்குத் தகாது – என்று விலக்கினர். அந்த நேரத்தில் தன்னைத் தடுக்காமல் ஒருவள் உள்ளாள் என்று உணர்ந்து அப்படிப்பட்ட பூமிப்பிராட்டியைக் கொண்டாடுகிறாள். மேலும், தான் அடைந்துள்ள காம புருஷார்த்தங்கள் என்னவென்று கூற விரும்பினாள், அதனைக் கூறுவதற்கு முன்பாக அவற்றை விரும்பும் மனிதர்கள் பற்றிக் கூறவேண்டும், மனிதர்கள் பற்றிக் கூறும்போது, அந்த மனிதர்கள் வாழும் பூமியைப் பற்றி கூறவேண்டும். ஆகவே, இந்த பூமிக்கு ஆதாரமாக உள்ள பூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள் (இங்கு ஆழ்வார் பரகாலநாயகி பாவத்தில் உள்ளதால், பெண்பாலில் கூறப்பட்டார். அல்லது இந்த மடலை கண்ணனின் குடக்கூத்தில் மனதை இழந்த ஆய்ச்சி ஒருவள் கூறுவதாகவும் கொள்ளலாம்).

(காரார்வரை கொங்கை) – ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலையாக மலைகளைச் சொன்னபடி, காரார்வரை என்கையாலே செறிந்து மேகம் படிந்த மலை என்று மலைக்கு உயரம் சொல்லிற்று. மேகம் படிந்த மலையென்கையாலே முலைக்கண் கருத்திருந்தாற்போலே இருக்குமென்கை. மலைகளை முலையாக்கிச் சொல்லிற்றாகில், எம் மலைகளைச் சொல்லிற்றென்னில் – திருமலைகளிரண்டையும் முலையாகச் சொல்லிற்றென்னுமிடம் சொல்லிற்று, தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னுமிவையே முலையா – என்று பெரிய திருமடலிலே சொல்லிற்று. ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலை சொல்லுகிறதாகில் உயர்ந்த மேரு ப்ரப்ருதிகளைச் சொல்லாதே இவற்றைச் சொல்லுவானென்னென்னில் – முலையாவது காந்தன் படுகாடுகிடக்குமிடமிறே, அப்படியே எப்போதுமொக்க பகவத் ஸந்நிதியுள்ள தேசமாகையாலே திருமலைகளைச் சொல்லிற்று. (வரைக்கொங்கை) – முலைக்குக் காடிந்யம் ஸ்வாபாவமாயிருக்குமிறே, அதுவும் சொல்லுகிறது.

விளக்கம் – (காரார் வரை கொங்கை) பூமிப்பிராட்டியின் ஸ்தனங்களாக மலையைக் கூறினாள். காரார்வரை என்று கூறுவதன் மூலம், மேகம் வந்து படிந்த மலை என்று மலையின் உயரம் உணர்த்தப்பட்டது. மேகம் படிந்த மலை என்பதன் மூலம் ஸ்தனத்தின் கண்கள் கறுத்திருப்பது போல் மலையின் உச்சியும் கறுத்துள்ளது எனப்பட்டது. ஸ்தனங்களை மலையாகக் கூறினாள், எந்த மலைகளை இவ்விதம் கூறினாள்? திருமலைகள் இரண்டுமே இவ்விதம் ஸ்தனங்களாகக் கூறப்பட்டது. பெரிய திருமடலில் – தென்னனுயர் பொருப்பும் தெய்வ வட மலையும் என்னுமிவையே முலையா – என்பதற்கு ஏற்ப திருமாலிருஞ் சோலையும், திருவேங்கடமலையும் ஸ்தனங்களாகக் கூறப்பட்டன. பூமிப்பிராட்டியின் ஸ்தனங்களுக்கு ஒப்பாக மேரு மலை போன்று உயர்ந்த மலைகளைக் கூறாமல், இவற்றை ஏன் கூற வேண்டும்? காரணம் – இவளது ஸ்தனங்கள் என்பது எப்போதும் எம்பெருமான் தங்கும் இடம் ஆதலால், அவன் எப்போதும் வாசம் செய்யும் இடங்களாகிய திருமலைகள் கூறப்பட்டன. (வரைக்கொங்கை) – பெண்களின் ஸ்தனங்களுக்கு கடினத் தன்மை இயல்பு அல்லவா, இந்தக் காரணத்தாலும் மலைகளை ஸ்தனங்களாகக் கூறினாள்.

(கண்ணார் கடலுக்கை) – கண்ணார் கடலென்கையாலே – தர்சநீயமான கடலென்னுதல், இடமுடைத்தான கடலென்னுதல். இடமுடைத்தாகையாவ தென்னென்னில் – ஸ்ரீபூமிப்பிராட்டிக்குக் கொடிக்கும் கொய்சகமும் வைத்து உடுக்கலாம்படி பரப்பையுடைத்தாயிருக்கை. (கடலுடுக்கை) – திருமேனியின் ஸௌகுமார்யத்துக்கீடாக உறுத்தாமே குளிர்ந்திருக்குமென்கை.

விளக்கம் – (கண்ணார் கடலுடுக்கை) காண்பவர்களின் கண்களை மகிழச் செய்வது கடலாகும். அல்லது பரந்த இடம் உள்ளதான கடல் என்றும் கூறலாம். பரந்த இடம் கொண்டதால் உள்ள பயன் என்ன என்றால், இது பூமிப்பிராட்டிக்கு கொசுவம் வைத்து உடுத்துக் கொள்ளும்படியான அகலத்தைக் கொண்டதே பயன் ஆகும். (கடலுடுக்கை) – அவளது திருமேனியின் மென்மைக்கு ஏற்ப உறுத்தாமல் குளிர்ந்து உள்ளது.

(சீரார் சுடர் சுட்டி) – அழகிய சுடரையுடைய ஆதித்யன் இவளுக்குத் திலகமென்கை. அன்றிக்கே, அணிமிகு தாமரைக்கை ஆபரணமாகக் கடவே தலைக்குத் தான் ஆபரணமாகப்பெறுகையாலே வந்த சீர்மையாகவுமாம்.

விளக்கம் – (சீரார் சுடர் சுட்டி) அழகான கதிர்களை உடைய சூரியன் பூமிப்பிராட்டிக்குத் திலகம் போன்று உள்ளான். அல்லது எம்பெருமானின் தாமரை போன்ற திருக்கரங்களுக்கு ஆபரணமாக உள்ள பூமிப்பிராட்டியின் தலைக்கு, இவன் (சூரியன்) ஆபரணமாக உள்ளதால் பெறும் மேன்மை கூறப்பட்டது.

(செங்கலுழிப் பேராற்றுப் பேராரமார்வில்) – ஸஹ்யத்திலே வர்ஷிக்கச் சிவந்த கலக்கத்தை உடைத்தாகையாலும், மலையிலுண்டான பொன் முதலான ரத்னங்களை உடைத்தாகையாலும், பூமியெங்கும் பரவிக்கொண்டு வருகையாலும், விலங்கிக்கிடக்கிற ஆறாகிற ஹாரம் கிடக்கிற மார்பையுடையவள். (பெரு மா மழை கூந்தல்) பெரு = பெருத்து, மா = கறுத்த, மழை=மேகங்கள்: நீர்க்கொண்டெழுந்த காள மேகத்திரளே இவளுக்கு மயிர்முடி, அதாவது இந்த்ரதநுஸ்ஸும், மின்னும் கலம்பகன் சூடினாற்போலே இருக்கையாலே, மேகத்தை மயிர்முடியென்கிறது. காந்தனுக்கு தர்சநீயமாயிருக்கையும், ஒருகால் குலைத்து ஞுழுந்த விடாய் ஆறும்படியாயிருக்கையும்.

விளக்கம் – (செங்கலுழிப் பேராற்றுப் பேரார மார்வில்) இதன் மூலம் பெரிய நதிகள் பூமிப்பிராட்டியின் திருமார்பு போன்றது என்றாள். திருமார்பானது ஸ்தனங்களில் உள்ள குங்குமம் முதலானவையால் சிவந்துள்ளது போன்று, இந்தப் பெரிய நதிகள் மலைகளில் இருந்து இறங்கி வரும்போது கலங்கிச் சிவந்துள்ளது. திருமார்பில் ரத்ன மாலைகள் உள்ளது போன்று, இந்த நதிகளிலும் மலைகளில் உண்டான இரத்தினங்கள் உள்ளன. திருமார்பு பரந்து உள்ளது போன்று, இந்த நதிகள் பூமி எங்கும் பரவிப் பாய்கின்றன. இப்படிப்பட்ட நதிகள் என்ற ஹாரத்தினால் அலங்கரிக்கப்பட்ட திருமார்பு உடையவள் பூமிப்பிராட்டி என்று கருத்து. (பெரு மா மழைக் கூந்தல்) – பெருத்துக் கருத்த மேகங்களையே இவள் தனது கூந்தலாகக் கொண்டுள்ளாள். நீர் நிறைந்த மழைக்கால மேகக்கூட்டங்களே பூமிப்பிராட்டியின் கூந்தலாக உள்ளது. இந்தக் கூந்தலில் இந்த்ரதனுஸ் என்னும் வானவில்லும், மின்னல்களும் கதம்ப மாலைகளாக உள்ளன. இந்தக் காரணங்களாலும் மேகமே இவளது கூந்தல் எனப்பட்டது. இந்த கூந்தல் கணவனின் கண்களுக்குக் குளிர்ச்சி அளிப்பதாக உள்ளது, அவன் ஒருமுறை அதனை வருடினால் அவன் களைப்புத் தீர்வது போன்று, இந்த மேகங்கள் ஒருமுறை மழை பொழிந்தால் உலகின் களைப்பு ஆறும்படி உள்ளது.

(நீராரவேலி) – ஆவரணஜலமே இவளுக்குக் காப்பென்னுதல், மர்யாதையென்னுதல். குளிர்த்தியையுடைத்தான சந்தநத்தோபாதியாய் நாமத்தையுடைய கற்பே இவளுயரத்துக்கு எல்லையென்கை. (நிலமங்கையென்னுமிப்பார்) – பூமியைச் சொல்லப்புக்கு அதுக்கு ப்ரகாரியான ஸ்ரீபூமிப்பிராட்டியளவும் சொன்னபடி. (பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) – சிறியார் பெரியாரென்னாதே விலக்ஷணர் அவிலக்ஷணர் என்னாதே பூமியிலுண்டான சேதநர் பரிக்ரஹித்த புருஷார்த்தம் மூன்றன்றோ என்கை. அன்றே என்றபடியாலே மோக்ஷமென்றொரு புருஷார்த்தம் உண்டன்று என்னுமிடம் சொல்லுகிறது.

விளக்கம் – (நீரார வேலி) இந்த அண்டத்தைச் சுற்றி உள்ள நீருக்கு ஆவரண ஜலம் என்று பெயர். இந்த ஆவரண ஜலத்தை அகழி போன்று தனது காவலாக பூமிப்பிராட்டி கொண்டுள்ளாள். அல்லது ஆரம் என்றால் சந்தனம் என்றும் ஒரு பொருள் உண்டு. ஆக, இவளது கற்பு சந்தனம் போன்று குளிர்ந்து உள்ளது. (நிலமங்கை என்னும் இப்பார்) – பூமியைச் சொல்ல வந்த ஆழ்வார், அந்த பூமிக்கு ஆதாரமாக உள்ள பூமிப்பிராட்டியைக் கூறினார். (பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) – சிறியவர்கள், பெரியவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இந்த உலகில் உள்ள அனைவராலும் விரும்பப்படும் புருஷார்த்தங்கள் மூன்று அல்லவா? பாசுரத்தில் – அன்றே – எனக்கூறுவதால் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் இல்லை என்று கூறினார்.

இப்பாரோர், (அம்மூன்றும் ஆராயில் தானே) இவற்றை ஆராயப்புகில், நம்முடைய திருவுள்ளத்தில் கிடக்கிற காமமே புருஷார்த்தமென்றாதல், ஏவகாரம் பாதத்தைப் பூரித்துக்கிடக்கிறதாய், ஆராயில்தான் என்றதாதல். (அறம் பொருள் இன்பமென்று) – கீழே புருஷார்த்தத்தை மூன்றென்று சொல்லச்செய்தே இங்கெடுத்ததுக்கு ப்ரயோஜனமென்னென்னில், மோக்ஷம் இதினுள்ளே ஒன்றென்று சொல்லுவாருண்டாகிலும் என்று அவர்களுக்கு இடமறச் சொல்லுகிறாள். (ஆரார் இவற்றினிடை அதனை எய்துவார்) – நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறாரன்று, இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு, அதனை எய்துவாரென்று தமக்கு உத்தேச்யமான காமத்தை எய்துவார் என்றபடி, ஆரார் இவற்றினிடை எய்துவார் என்கையாலே – பயிலுந் திருவுடையார் யவரேலும் – என்னுமா போலே இப்புருஷார்த்தத்தை லபிப்பார் ஜன்ம வ்ருத்தங்களால் குறைவுடையவரேயாகிலும் அவர்களும் சிலவரே என்கிறார். (சீரார் இருகலையும் எய்துவர்) – இத்தை லபிக்கும் ஸம்பத்தையுடையவர்கள் இதுக்குக் கலாமாத்ரமான தர்மார்த்தங்களிரண்டையும் லபித்தராகக்கடவர். ஸாத்யத்தை லபித்தவர்கள் ஸாதநத்தையும் அனுஷ்டித்தாராகக்கடவதிறே. இவற்றுக்குச் சீர்மை இதுக்கு ஸாதநமாகையாலே. ஓரூருக்குப் போகவென்று ஒருவன் மனோரதித்தால், அவ்வூரிலே அவனைக் கண்டால் நடுவுபட்ட வழியும் வந்தானாகக்கடவதிறே.

விளக்கம் – (அறம் மூன்றும் ஆராயில் தானே) இந்த உலகில் உள்ளவர்கள் அறம், பொருள் மற்றும் இன்பம் என்ற மூன்று புருஷார்த்தங்களையும் ஆராய்ந்தால், தன்னுடைய மனதில்(மடல் எடுத்தவள் மனதில்) உள்ளதும், அவளுக்கு விருப்பமானதாகிய காமம் என்பது மட்டுமே புருஷார்த்தமாக உள்ளது. (அறம் பொருள் இன்பம் என்று) – கீழே புருஷார்த்தங்கள் மூன்று என்று கூறிவிட்டு, இங்கு மீண்டும் ஏன் அவற்றைக் கூறவேண்டும்? காரணம், இந்த மூன்றில் மோக்ஷம் என்பது அடங்கவில்லை என்றாலும் ஒரு சிலர், இந்த மூன்றில் மோக்ஷமும் ஒன்று என விவாதிக்கக் கூடும். அவர்களுக்கு இடம் தராமல் இருப்பதற்காகத் தனித்தனியே கூறுகிறார். (ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார்) – நாலடியார் என்ற நூலில் – நடுவணது எய்த இருதலையும் எய்தும் – என்று கூறப்பட்டது. இதன் பொருள், அறம்–பொருள்–இன்பம் என்று கூறப்பட்டவற்றில், நடுவில் கூறப்பட்ட பொருளை அடைந்தால் மற்ற இரண்டையும் அடைந்துவிடலாம் என்பதாகும். ஆனால் இங்கு ஆழ்வார் அந்தக் கருத்தை ஏற்கவில்லை, காரணம், ஆழ்வாருக்கு பொருள் மீது பற்றில்லை. ஆகவே தனக்கு விருப்பமான காமத்தைக் கூறி, காம புருஷார்த்தத்தை அடைபவர்கள் அதற்கு உபாயமாக இருக்கும் அறம் மற்றும் பொருளை அடைந்தவர்கள் ஆவர் என்றார். திருவாய்மொழி(3–7–1) – பயிலும் திருவுடையார் எவரேலும் – என்று கூறுவது போல், இந்தக் காம புருஷார்த்தத்தை அடைந்தவர்கள் தங்களது பிறப்பாலும்–ஒழுக்கத்தாலும் எத்தனை தாழ்ந்தவர்களாக இருந்தாலும், சிறந்தவர்களே என்றார். (சீரார் இருகலையும் எய்துவர்) – இந்தக் காம புருஷார்த்தத்தை அடையப் பெற்றவர்கள், அறம்–பொருள் ஆகிய இரண்டையும் அடைந்தவர்களே ஆவார். ஸாத்யம் எனப்படும் இன்பத்தைப் பெற்றவர்கள், அதற்கு உபாயமான அறம்–பொருளை அடைந்திருக்கவேண்டும் அல்லவா? இவை இரண்டிற்கும்(அறம்–பொருள்) பெருமை என்பதே, காம புருஷார்த்தத்திற்கு உபாயமாக உள்ளன என்பது ஆகும். ஒருவன் ஓர் ஊருக்குச் செல்ல வேண்டும் என்று விரும்பி அவ்விதமே சென்றுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவனை அந்த ஊரில் நாம் கண்டால், அவன் அந்த ஊருக்குச் செல்லும் வழி அனைத்தையும் கடந்தவனாகவே இருக்க வேண்டும் அல்லவா?

(சிக்கெனமற்று இத்யாதி) – அல்பாஸ்திரமென்று இப்புருஷார்த்தங்களை தூஷித்து ஆநந்தாவஹமாய, அந்தமில் பேரின்பமாய், நிலைநின்ற புருஷார்த்தம் உண்டென்பர்கள், இப்படி காணவெண்ணாதே. அவர்கள் வசஸ்ஸமுத்திரத்திலே கேட்டுப்போமித்தனை என்கை. ஆரானும் என்கையாலே – அவயபதேச்யருமாய் அவ்யுத்பந்நருமாயிருப்பார் சிலரென்கை.

விளக்கம் – (சிக்கெனமற்று இத்யாதி) இந்த மூன்று புருஷார்த்தங்கள்(அறம்–பொருள்–இன்பம்) மிகவும் அற்பமானவை என்று விலக்கி, நிலையுள்ளதும் ஆனந்தமயமானதும் ஆகிய புருஷார்த்தம்(மோக்ஷம்) ஒன்று உண்டு என்பார்கள். ஆனால் அப்படிபட்ட புருஷார்த்தத்தை நேரில் கண்டவர்கள் யாருமில்லை. இவ்விதம் கூறுபவர்களின் சொற்கள் கடல் போன்று வந்தாலும், அவை கானல் நீராகவே உள்ளன. ஆரானும் என்று கூறுவதன் மூலம் அறிவற்றவர்களாக, ஊர்–பேர் தெரியாதவர்களே இவ்விதம் கூறுவர்(மோக்ஷம் என்ற புருஷார்த்தம் பற்றி – இங்கு ஓர் ஐயம் ஏற்படலாம் – ஆழ்வார் ஏன் இவ்விதம் மோக்ஷம் உண்டு என்பதைக் கூறுபவர்களைத் தூஷிக்கிறார்? இதற்கு விடை – எவ்வளவு முயன்றாலும் எம்பெருமானை அடைய முடியாததால் மடல் எடுத்தவள், பகவான் மீது வெறுப்புற்று, நாத்திகம் பேசுகிறாள் – என்று கருத்து).

அதுதானில்லையோவெனில், (ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்) – லோகபரிக்ரஹத்தை அவர்கள் ஆராயாமல் செல்லுகிறார்களாமத்தனை, அதொன்று அல்ல என்கை. அவர்கள் அறியாமல் சொன்னாராம்படி என்னென்னில், (ஓராமையாமாறு இத்யாதி) – அவர்கள் அறியாமல் சொன்னார்களென்னுமிடம், என் உக்திமாத்ரத்தாலே அவர்கள் ப்ரமாண ப்ரமேயம் இரண்டையும் அழிக்கிறேன், நீங்கள் செய்யவேண்டுவது செவிதாழ்த்துத் தருமித்தனை.

விளக்கம் – அப்படி என்றால் மோக்ஷம் என்ற புருஷார்த்தம் உண்மையாக உண்டா–இல்லையா என்ற கேள்விக்கு விடை தருகிறார். (ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்) – அவர்கள் மற்றவர்கள் கூறுவதை கேட்டு, தாங்களாகவே ஆராயாமல் மோக்ஷம் என்பது உண்டு என்று கூறுகின்றனர். ஆனால் அப்படி ஏதும் உண்மையில் இல்லை. அவர்கள் ஆராயாமல் கூறுகிறார்கள் என்று எப்படிக் கூற முடிந்தது? (ஓராமையாமாறு இத்யாதி) – அவர்கள் ஆராயாமல் கூறினார்கள் என்பதை நான் விளக்குகிறேன். என்னுடைய சொற்களைக் கொண்டே அவர்கள் கூறும் ப்ரமாணமான சாஸ்திரத்தையும், அந்த சாஸ்திரம் மூலம் அறியப்படும் ப்ரமேயமான மோக்ஷத்தையும் நிராகரிக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது, உங்கள் காதுகளைக் கொடுத்து கேட்பது மட்டுமே ஆகும்.

(காரார்புரவி) – அதான் உங்களுக்கேற்க உண்டேயென்று தோற்றிற்றோ? (காரார்புரவி) – மேகபதத்திலே குதிரை ஸஞ்சரிக்கையாவதென்? (புரவியேழ்) இரண்டல்ல, நாலல்ல, ஆறல்ல, எட்டல்ல. ஏழு குதிரை பூண்கையாவதென் (தனியாழித் தேரார்) – பிள்ளாய் இரண்டாதல் நாலாதலன்றிக்கே தனிச் சக்ரமாம், பிள்ளாய் ஆகாசத்திலே ஒருவன் தேர் நடக்கையாவதென்? (நிறை கதிரோன்) – ஒரு விளக்கின் ஸந்நிதியிலே விழிக்கமாட்டாத அதிக்ஷுத்ரன், உஷ்ண கிரணங்களால் பூர்ணனாயிருக்கிற ஆதித்யனைச் சென்று கிட்டுகையாவதென்? (மண்டலத்தை கீண்டு புக்கு) – ஒருவனை இங்கே உபாசித்து, அவனுடைய ராஜகுலத்தாலே ஆதித்ய மண்டலத்தின் நடுவே போகிறானாமிறே. அங்கே ஏறப் போனால் அவ்வழிப்போக்குத்தான் இங்குப்போலே இரண்டருகும் பணையாக நடுவே போகிறானோதான் என்கை. (ஆராவமுதமங்கெய்தி) – திருநறையூர் இங்கே, திருவாய்ப்பாடி இங்கேயாயிருக்கச், அங்கு எத்தைக் கொண்டு எத்தைப் பொறுவது என்கை.

விளக்கம் – இனி, சூரியனின் தேரைப் பற்றியும் அவன் குதிரைகள் பற்றியும் கூறுகிறார். (காரார் புரவி) – மேக மண்டலத்தில் நடக்கும் குதிரை உங்களுக்குத் தெரிகிறதா? மேக மண்டலத்தில் குதிரை நடப்பது இயலுமா? (புரவி ஏழ்) – அவ்விதம் சூரியனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு குதிரைகள் அல்லவாம், அது ஏன் ஏழு குதிரைகளைப் பூட்ட வேண்டும்? (தனி ஆழி தேரார்) – சூரியனின் தேரில் இரண்டு சக்கரங்களும், நான்கு சக்கரங்களும் இல்லையாம், ஒரே சக்கரம் மட்டும் உள்ளதாம். ஆகாயத்தில் ஒருவனுடைய தேர் எவ்விதம் ஓடும்? (நிறை கதிரோன்) – ஒரு விளக்கையே வெகு நேரம் பார்க்க இயலாத ஜீவன், (உயிர் பிரிந்த பின்னர்) மிகவும் உஷ்ணமான கதிர்கள் கொண்ட

சூரியனைச் சென்று அடைவது எவ்விதம் நடக்கும்? (மண்டலத்தை கீண்டு புக்கு) – பரம்பொருளை இங்கு உபாசனை செய்து விட்டு, அவன் அளித்த வலிமையாலே சூரிய மண்டலத்தின் நடுவே செல்கிறானாமே – இது எப்படி நடக்கும்? அவ்விதம் செல்லும் போது திருவரங்கத்தில் உள்ளது போன்று இரு பக்கமும் நிழல் தரும் மரங்கள் இருக்க, அவற்றின் நடுவிலா நடந்து செல்கிறான்? (ஆராவமுதம் அங்கு எய்தி) – திருநறையூர், திருவாயர்ப்பாடி போன்ற இடங்களில் ஆராவமுதம் உள்ளபோது, அந்த அமுதத்தைத் தேடி அங்கே போகின்றானாமே – இது என்ன மடைமை? (அங்கு எய்தி) – அவனை அடைவதற்கு ஏற்ற பனைமடலும், திருநறையூரும் இங்கு உள்ளபோது, அங்கு சென்று எதனைக் கொண்டு, எதனைப் பெற முயல்கிறான்?

(அதில் நின்றும் வாராதொழிவதொன்றுண்டே) – போனால் பின்னை புநராவ்ருத்தியில்லையாம். தன்னிச்சையின்றிக்கே இருக்கச் செய்தே, தன் கர்மத்தாலே நரகத்தை அனுபவித்தவனும் மீளா நின்றான், இச்சையாலே ஸௌகானுபவம் பண்ணப்புக்கவன் மீளானாம். (ஒன்றுண்டே) – இப்படிப்பட்டதொரு புருஷார்த்தம் உண்டென்று தோற்றியிரா நின்றதோ உங்களுக்கு? என்கை.

விளக்கம் – (அதில் நின்றும் வாராது ஒழிவது ஒன்று உண்டே) அங்கு சென்று விட்டால் மீண்டும் இங்கு வர இயலாதாமே. தனது விருப்பப்படி நடக்க இயலாமல், தனது கர்மபலன்படி நடந்து, அதன் காரணமாக நரகத்தை அடைந்தவர்கள் கூட, மீண்டும் இந்த பூமிக்குத் திரும்ப இயலுமாம், ஆனால் தன்னுடைய விருப்பத்தாலே பரம்பொருளை அனுபவிக்கச் சென்றவன் மீண்டும் வர முடியாதாம், இது என்ன வேடிக்கை? (ஒன்று உண்டே) – இப்படியாக முழுவதும் முரண்பாடுகளும் வேடிக்கைகளும் நிறைந்த மோக்ஷம் என்ற புருஷார்த்தம் உள்ளது என்றா நீங்கள் நம்புகிறீர்கள்?

(அதுநிற்க) – அதுதான் உண்டாக, இல்லையாக பிணக்கென்? என்கை. (ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே) – ஸ்தல ஸஞ்சாரியை விட்டு, சாகா ஸஞ்சாரியைப் பற்றுவதே. ஸௌஸங்கதமுமாய் உபயோக யோக்யமுமாயிருக்கிற வஸ்து கைப்பட்டிருக்க, இத்தை உபேஷித்து, கைப்படாதேயிருப்பதுமாய், கைப்படுவதொன்றென்று தெரியாதிருப்பதுமாய், கைப்பட்டாலும் உபயோக யோக்யமுமின்றிக்கே இருக்கிற வஸ்துவுக்கு வில்லெடுத்துத் திரிவதே. இதொரு சேதந க்ருத்யமோ? என்கிறார்.

விளக்கம் – (அது நிற்க) அப்படிப்பட்ட ஒரு மோக்ஷம் என்ற புருஷார்த்தம் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன, அதற்கு வாதம் செய்வது ஏன்? (ஏரார் முயல் விட்டு காக்கை பின் போவதே) – அப்படியே மோக்ஷ புருஷார்த்தம் உள்ளது என்று ஏற்றுக்கொண்டாலும், இங்கு உள்ள அர்ச்சாவதாரத்தை விட்டு, எங்கோ உள்ள மோக்ஷத்தைத் தேடுவது ஏன்? இந்தச் செயல், தரையில் உள்ள முயலை விட்டு, ஆகாயத்தில் உள்ள காக்கையைப் பிடிக்க முற்படுவது போன்றல்லவா உள்ளது? எளிதாகக் கைப்பற்றக் கூடியதும், உண்ணக் கூடியதும் ஆகிய முயலை விட்டுவிட்டு, கையில் எளிதில் சிக்காததும், சிக்கக்கூடியது என்ற உறுதியாகக் கூற இயலாததும், அப்படியே சிக்கினாலும் உண்ணத் தகுதி இல்லாததும் ஆகிய காக்கையைப் பிடிக்க வில் எடுத்துக் கொண்டு செல்வது ஏன்? இது ஞானம் உள்ளவர்கள் செய்யும் செயலோ? (இங்கு முயல் என்பது அர்ச்சாவதாரத்தையும், காக்கை என்பது மோக்ஷத்தையும் குறிக்கும்).

(ஏராரிளமுலையீர்) – நீங்கள் வடிவுபடைத்தது, வடிவழகாலுள்ள ப்ரயோஜனம் இங்கே கொள்ளுகைக்கன்றோ என்று கருத்து. கொம்மை முலைகள் இடர்த்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் என்னக்கடவதிறே. இச்சரீரத்தைக் கொண்டு அவதாரங்களிலும், உகந்தருளின் நிலங்களிலும் அடிமை செய்யாதே, தேசாந்தரே காலாந்தரே தேஹாந்தரே பெறும்பேறாகிறது என்னென்புதெங்கை. (என்றனக்குற்றதுதான்) இதுவெல்லாங்கிடக்க நான் மாறுபாடுருவப்பட்டதொன்று கேளுங்கள் என்கிறார்.

விளக்கம் – (ஏரார் இளமுலையீர்) நீங்கள் அழகான ஸ்தனங்கள் கொண்டு இருப்பது, அதன் பலனை இங்கேயே அனுபவிக்க அல்லவா? நாச்சியார் திருமொழி(13–9) – கொம்மை முலைகள் இடர் தீரக் கோவிந்தற்கோர் கூற்றேவல் – என்று கூறியதை உணர்வீர்களாக. இந்த உடலைக் கொண்டு அவன் எடுக்கும்

அவதாரங்கள், அவன் வாசம் செய்யும் அர்ச்சாவதார ஸ்தலங்கள் ஆகிய இடங்களில் கைங்கர்யம் செய்ய வேண்டும். அதனை விட்டு மற்றொரு உடலை(மோக்ஷத்தில் கிட்டும் நித்யசூரிகள் போன்ற உடல்), மற்றொரு இடத்தில்(பரமபதத்தில்), வேறு ஒரு காலத்தில் எடுப்பதால் என்ன பயன்? (என்றனக்குற்றதுதான்) – இது போன்ற விஷயங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நான் அவனது கடைக்கண் பார்வை என்ற அம்பினால் பட்டபாட்டைக் கேளுங்கள்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்
(பகுதி – 2)

(யோ நிச்சிகாய மநஸை முநிவாஹநம் தம்) என்று யாவரொருவர் ஏகண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே என்று அறுதியிட்டார் அப்படிப்பட்ட அந்த முநிவாஹநரை. (மநஸை) மநஸ்ஸாலே ப்ரதிபத்தி பண்ணுகிறேனென்றபடி. அயனலர்க்கொடுதொழுதேத்த என்னும்படி ஹம்ஸவாஹநனான சதுர்முகன் பஹுமுகமாக அநுபவித்தாப்போலே முநிவாஹநரான இவரும் ஏகமுகமாக இரண்டு கண்ணாலும் கண்டநுபவித்தார்.

விளக்கம் – எந்த ஓர் ஆழ்வார் – கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே – என்று தளராத உறுதியுடன் கூறினாரோ, அப்படிப்பட்ட முனிவாகனரான திருப்பாணாழ்வாரை மனது நிறையும்படி அனுபவிக்கிறேன் என்று கருத்து(திருவரங்கனின் கட்டளைக்கு ஏற்ப, லோகசாரங்கன் என்ற முனிவர், இந்த ஆழ்வாரைத் தனது தோள்களில் ஏற்று அரங்கனின் கோயிலுக்கு வந்ததால், முனிவாகனர் எனப்பட்டார்). பெரியதிருமொழி (4–2–6) – அயனலர்க் கொடுதொழுதேத்த – கூறுகிறபடி, அன்னத்தை வாகனமாக உடைய ப்ரம்மன் (நான்முகன்) த்ரிவிக்ரமனைத் தனது நான்கு முகத்தாலும் அனுபவித்தது போன்று, முனிவனைத் தனது வாகனமாக உடைய இவர் தனது ஒரு முகத்தாலும் இரண்டு கண்களாலும் நம்பெருமாளை அனுபவித்த்தார்.

க்ரீடகேயூரக ரத்நகுண்டலம் ப்ரலம்பமுக்தாமணி ஹேமபூஷிதம் விசால வக்ஷஸ்ஸ்தல சோபிகௌஸ்துபம் ஸ்ரீயாச தேவ்யாத்யுஷிதோருவிக்ரஹம் ப்ரதப்த சாமீகர சாருவாஸஸம் ஸுமேகலாநூபுர சோபிதாங்க்ரிகம் ஸ்பந்துரீஜாத ம்ருணாள கோமளம் ததாநமச்சச்சவியஜ்ஞ ஸூத்ரகம் புஜோபதாநம் ப்ரஸ்ருதாக்யஹஸ்தம் நிகுஞ்சி தோத்தாநித பாதயுக்மம் ஸுதீர்க்கமுர்வம்ஸமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷம் ததர்ச என்று ப்ரஹ்மாவானவன் அபிமாநியாகையாலே, முடியே தொடங்கியநு பவித்தான், இவர் அடியாராகையாலே அடியே தொடங்கி அநுபவித்தார். அவன் கண்டவநந்தரம் விஷயங்களையும் கண்டான், இவர் விஷயங்களைக் கண்டிலர், ஏதிருக்கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளனவ, ஏகண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றார். வீணையும் கையுமாய் ஸேவிக்கிற இவர்க்கு சேமமுடை நாரதனாரும் ஒருவகைக்கு ஒப்பாகார்.

விளக்கம் – ஸ்ரீஹஸ்திகிரி மஹாத்ம்யம் என்ற நூலில், கீழே உள்ளது போன்று ப்ரம்மன் காஞ்சி வரதனை அனுபவித்தான்.

க்ரீடகேயூரக ரத்ந குண்டலம்
ப்ரலம்ப முக்தாமணி ஹேமபூஷிதம்
விசால வக்ஷஸ்ஸ்தல சோபிகௌஸ்துபம்
ஸ்ரீயாச தேவ்யாத்யுஷிதோருவிக்ரஹம்
ப்ரதப்தசாமீகரசாருவாஸஸம்
ஸுமேகலாநூபுர சோபிதாங்க்ரிகம்
ஸ்பந்துரீஜாத ம்ருணாள கோமளம்
ததாநமச்சச்சவி யஜ்ஞ ஸூத்ரகம்
புஜோபதாநம் ப்ரஸ்ருதாங்ய ஹஸ்தம்
நிகுஞ்சிதோத்தாநித பாதயுக்மம்
ஸுதீர்க்கமுர்வம் ஸமுதக்ரவேஷம்

புஜங்கதல்பம் புருஷம் ததர்ச

இதன் பொருள் – க்ரீடம், தோளில் உள்ள வளைகள், ரத்ன குண்டலங்கள் போன்றவற்றைக் கொண்டவன், முத்துமாலை, ரத்னங்கள், பொன் ஆகியவை உடையவன், அழகான பரந்த திருமார்ப்பில் கௌஸ்துப மணி உடையவன், ஸ்ரீதேவியால் எப்போதும் வாஸம் செய்யப்பட்ட அழகிய திருமேனி கொண்டவன், உருக்கிய தங்கம் போன்ற அழகான பீதாம்பரம் அணிந்தவன், மேகலை மற்றும் சிலம்புகளுடன் கூடிய திருவடிகள் உடையவன், தாமரையின் தண்டு போன்று நீண்டும் வெண்மையானதும் ஆகிய யஜ்ஞோபவீதம் அணிந்தவன், ஒரு திருக்கரத்தைத் தலையணையாகக் கொண்டவன், மற்றொரு திருக்கரத்தை நீட்டியபடி உள்ளவன், ஒரு பக்கமாகச் சயனித்து விரிந்துள்ள திருவடிகளைக் கொண்டவன், நீண்ட தோள்களை உடையவன், ஆதிசேஷன் என்ற படுக்கையை உடைய புருஷனை ப்ரம்மன் கண்டான் – என்பதாகும். ஆக ப்ரம்மன் அவனது உபாஸகனாக உள்ளதால் திருமுடியிலிருந்து திருவடிவரைக் கண்டான், இவர் அடியாராக உள்ளதால் திருவடியிலிருந்து அனுபவித்தார். ப்ரம்மன் பரம்பொருளுடன் உலக விஷயங்களையும் சேர்த்தே கண்டான். இவர் பெரியபெருமாளைத் தவிர வேறு எதனையும் காணவில்லை. அதனால்தான் – திருக்கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளன என்றும், கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றும் – கூறினார். நாரதர் கூட, வீணையும் கையுமாக உள்ள இவருக்கு ஒப்பில்லை.

பெரியாழ்வார் அவதாரத்தில் அநுபவம் இவர்க்கு அர்ச்சாவதத்திலே, அவர் பாதக்கமலம் என்றத்தை திருக்கமலம் என்றார், பீதகச்சிற்றாடையொடும் என்றதை அரைச்சிவந்த ஆடையின்மேல் என்றும், அழகியவுந்தியை அயனைப் படைத்ததோரெழில் உந்தி என்றும், பழந்தாம்பாலார்த்த உதரத்தை திருவயிற்று உதரபந்தம் என்றும், குருமாமணிப்பூண் குலாவித்திகழும் திருமார்வை திருவாரமார்வு என்றும், அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய கண்டத்தை முற்றும் உண்ட கண்டம் என்றும், நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலத்தை கையினார் சுரிசங்கனல் ஆழியர் என்றும், செந்தொண்டை வாயை செய்யவாய் என்றும், கண்கள் இருந்தவாரென்றதை அப்பெரியவாய கண்கள் என்றும், உருவுகரிய ஒளி மணிவண்ணன் என்றதை எழில் நீலமேனி என்றும், குழல்கள் இருந்தவா என்றதை துளவவிரையார் கமழ் நீண்முடி என்றும் அருளிச் செய்தார். கோவலனாய் வெண்ணையுண்ட வாயனிறே பெரியபெருமாள். ஆகையால் அநுபவத்தில் இருவரும் ஸகோத்ரிகளாயாய்த்திருப்பது. இப்படி மனப்ரீதி பிறக்கும்படி அனுபவித்த ஆழ்வாரை இங்கு மனப்ரீதி பிறக்கும்படி (மநவை) என்று மனஸ்ஸாலே ஸேவிக்கும்படி சொல்லிற்று.

விளக்கம் – பெரியாழ்வார் கண்ணனின் அவதாரத்திலே மயங்கிக் கிடந்தார், இவர் பெரியபெருமாளின் அர்ச்சாவதாரத்தில் மயங்கினார். பெரியாழ்வார் – பாதக்கமலம் – என்று கூறியதை, இவர் – திருக்கமல பாதம் – என்றார். அவர் – பீதகச்சிற்றாடையொடும் என்றதை, இவர் – அரைச்சிவந்த ஆடையின்மேல் என்றும் – என்றார். அவர் – அழகியவுந்தி என்றதை, இவர் – அயனைப் படைத்ததோரெழில் உந்தி என்றார். அவர் – பழந்தாம்பாலார்த்த உதரம் – என்றதை, இவர் – திருவயிற்று உதரபந்தம் என்றார். அவர் – குருமாமணிப்பூண் குலாவித்திகழும் திருமார்வு – என்றதை, இவர் – திருவாரமார்வு என்றார். அவர் – அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய கண்டம் – என்றதை, இவர் – முற்றும் உண்ட கண்டம் என்றார். அவர் – நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலம் – என்றதை, இவர் – கையினார் சுரிசங்கனல் ஆழியர் என்றார். அவர் – செந்தொண்டை வாய் – என்றதை, இவர் – செய்யவாய் என்றார். அவர் – கண்கள் இருந்தவா – என்றதை, இவர் – அப்பெரியவாய கண்கள் என்றார். அவர் – உருவுகரிய ஒளி மணிவண்ணன் – என்றதை, இவர் – எழில் நீலமேனி என்றார். அவர் – குழல்கள் இருந்தவா என்றதை, இவர் – துளவவிரையார் கமழ் நீண்முடி என்றும் அருளிச் செய்தார். கோவலனாய் வெண்ணையுண்ட வாயனாகப் பெரியபெருமாள் உள்ளதால், திருப்பாணாழ்வாரும் கண்ணனாகவே பெரியபெருமாளை அனுபவித்தார் எனலாம். ஆகையால், பகவத் அநுபவத்தில் இருவரும் ஒரே போன்று மனம் கொண்டே இருந்தனர். இப்படியாகத் தனது மனதில் இன்பம் பிறக்கும்படி பெரியபெருமாளை அனுபவித்த ஆழ்வாரை, இங்கு மனதில் இன்பம் பிறக்கும்படி அனுபவித்ததைக் கூறினார்.

## திருமலை நம்பி அருளிச் செய்த தனியன்

காட்டவே கண்ட பாதகமல நல்லாடை உந்தி
தேட்டரும் உதர பந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே

பொருள் – தாமரை போன்ற திருவடிகள், சிவந்த பீதாம்பர ஆடை, அழகான தொப்பூழ், மிகவும் அரியதான அரைநாண், பெரியபிராட்டி அமரும் திருமார்பு, அழகான கழுத்து, சிவந்த வாய், சோர்வு இல்லாத திருக்கண்கள், நீண்ட திருமே ஆகியவற்றுடன் கூடிய பெரியபெருமாளை, லோகஸாரங்கன் என்ற முனிவரின் தோள்களில் அமர்ந்து சென்று திருப்பாணாழ்வார் வணங்கி ஆனந்தம் அடைந்தார். அந்த ஆனந்தத்தை, தனது பாசுரங்கள் மூலமாகத் தெரிவித்து மகிழும் திருப்பாணாழ்வாரின் திருவடிகளைத் துதிப்போமாக.

அவதாரிகை – பெரியபெருமாளைப் பாததிகேசாந்தமாய் அனுபவிக்கப் பெற்ற பாண்பெருமாளை ஸ்தோத்ரம் பண்ணி ஹர்ஷிக்கும்படி சொல்லுகிறது.

விளக்கம் – பெரியபெருமாளை, திருவடி தொடங்கி திருமுடிவரை நின்று அனுபவித்த திருப்பாணாழ்வாரைத் துதித்து, மனம் ஆனந்தம் அடையும்படி இந்தத் தனியன் கூறுகிறது.

வ்யாக்யானம் – (காட்டவே கண்ட பாதம்) அரங்கத்தம்மான் திருக்கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே என்று ஸ்ரீரங்கேசயபாதபங்கஜயுகம் என்ற ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜங்களைச் சொல்லுகிறது. (நல்லாடை) அரங்கத்தம்மான் அரைச்சிவந்தவாடை என்று ரங்கதுரந்தரனுடைய பீதாம்பரத்தைச் சொல்லுகிறது. (உந்தி) அரங்கத்தரவினணையன் அயனைப் படைத்ததோரெழிலுந்தி என்று விதிசிவநிதாமான நாபீபத்மத்தைச் சொல்லுகிறது.

விளக்கம் – (காட்டவே கண்ட பாதம்) – அரங்கத்தம்மான் திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றவே என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (1–125) ஸ்ரீரங்கேசயபாதபங்கஜயுகம் – அழகியதான பெரியபெருமாளின் தாமரை போன்ற திருவடிகள் – என்றும் கூறப்படும் ஸ்ரீரங்கராஜனின் திருவடிகள் கூறப்பட்டது. (நல்லாடை) – அரங்கத்தம்மான் அரைச்சிவந்த ஆடை என்று திருவரங்கத்தை நியமித்தபடி உள்ளவனின் பீதாம்பரம் கூறப்பட்டது. (உந்தி) – அரங்கத் தரவினணையன் அயனைப் படைத்தது ஓர் எழில் உந்தி என்று ப்ரஹ்மனுக்கும் ருத்ரனுக்கும் காரணமாக உள்ள தொப்பூழ் கூறப்பட்டது.

(தேட்டருமுதபந்தம்) தேட்டரும் திறல் தேனான தென்னரங்கனுடைய தேடற்கரிய உதரபந்தம். அரங்கத்தம்மான் திருவயிற்றுதரபந்தம் என்று பட்டம்கிலோதரபந்தநம் என்றதைச் சொல்லுகிறது. (திருமார்வு) அரங்கத்தம்மான் திருவாரமார்பு என்று லக்ஷ்மீலளித க்ருஹமான வக்ஷஸ்தலத்தைச் சொல்லுகிறது. (கண்டம்) அரங்கநகர் மேயவப்பன் முற்றுமுண்ட கண்டம் என்று ஸ்ரீரங்கநேதாவின் கண்டத்தைச் சொல்லுகிறது. (செவ்வாய்) அணியரங்கனார் செய்யவாய் என்று, அதரமதுராம்போஜம் என்று அருணாதர பல்லவத்தைச் சொல்லுகிறது. (வாட்டமில்கண்கள்) க்ஷிணோஜ்ஜ்வலமாய் அழலானியையுடைய தாமரைப் பூவில் வ்யாவ்ருத்தமாய், ஸதைகரூபமாய், அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள் என்று விசால ஸ்பீதாயத்ருசிரசிசிரதாம்ர தவளமான ஸ்ரீரங்க ப்ரணயி நயநாப்ஜங்களைச் சொல்லுகிறது. (மேனி) ஏவம்விதமான திவ்யமங்கள விக்ரஹத்தை.

விளக்கம் – (தேட்டரும் உதர பந்தம்) – பெருமாள் திருமொழி(2–1) தேட்டரும் திறல் தேனான தென்னரங்கன் என்று அருளிச் செய்தபடி, யாராலும் எளிதில் (தங்கள் முயற்சியால்) தேடி அடைய இயலாத பொன்னாலான அரைஞாண் கயிறு. இதனை இந்த ஆழ்வார் – அரங்கத்தம்மான் திருவயிற்றுதரபந்தம் – என்று அனுபவித்தார். இதனையே பராசரபட்டர் ரங்கராஜ ஸ்தவத்தில்(1–115) – பட்டம்கிலோதரபந்தநம் – பெரியபெருமாளின் உதரபந்தனம் என்பது அவனுக்கு உள்ள பரத்வ குணம் மற்றும் ஸௌலப்ய குணம் ஆகிய இரண்டிற்கும் கட்டப்பட்ட

பட்டம் – என்றார். (திருமார்வு) – ஆழ்வார் அரங்கத்தம்மான் திருவாரமார்பு என்று கூறியதை பட்டர் ரங்கராஜ ஸ்தவத்தில்(1–111) லக்ஷ்மீலளித க்ருஹமுபாஸே – மஹாலக்ஷ்மி விளையாடும் என்று கூறினார். (கண்டம்) – அரங்கநகர் மேயவப்பன் முற்றுமுண்ட கண்டம் என்று ஆழ்வார் அனுபவித்த ஸ்ரீரங்கநாதனின் திருக்கழுத்து கூறப்பட்டது. (செவ்வாய்) – அணியரங்கனார் செய்யவாய் என்று ஆழ்வார் அனுபவித்ததை, பட்டர் ரங்கராஜ ஸ்தவத்தில்(1–103) – அதரமதுராம்போஜம் – திருப்பவளம் போன்ற அழகான தாமரை மலர் என்றார். (வாட்டமில் கண்கள்) – சிறிதும் களைப்பற்றதாய், ஒருவிதமான சூடு உடைய தாமரை மலரை விட வேறுபட்டதாக, எப்போதும் ஒரே போன்று உள்ளதாக, அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள் என்று கூறுவதற்கு ஏற்றபடி பரந்தும் விரிந்தும் நீண்டும் அழகானதாகவும் சிவப்பும் வெளுப்பும் கலந்து உள்ள ஸ்ரீரங்கநாதனின் கண்கள் கூறப்பட்டன. (மேனி) இப்படிப்பட்ட திவ்யமான விக்ரஹத்தை

(முனியேறி) – முநிவாஹநராய். (தனிபுகுந்து) – இந்த மஹாபோகத்திலே தாம் ஏகராய் உள்புகுந்து. (பாட்டினால்) அனுபவத்துக்குப் பாசுரமிட்டுப் பேசின அமலனாதிபிரான் என்கிற ப்ரபந்தத்தின் பாட்டுக்களாலே அண்டர்கோன ணியரங்கனைக் கண்டு வாழுமவராய்த்து இவர். பின்பு இவ்வனுபவத்துக்கு பட்டர் தேசிகரானார். (கண்டுவாழும்) காட்சியே வாழ்ச்சியாக வாழுகிற. (பாணர்தாள்) வீணாபாணியாய்ப் பெரியபெருமாள் திருவடிக்கீழே நிரந்தர ஸேவை பண்ணிக்கொண்டு நிற்கிற திருப்பாணாழ்வார் திருவடிகளை. (பரவினோம்) ஸ்தோத்ரம் பண்ணினோம். அலப்யலாபமானது லபிக்கவும் பெற்றோம், இனியொரு குறைகளுமில்லையென்கிறது.

விளக்கம் – (முனியேறி) – லோகஸாரங்க முனிவரைத் தனது வாகனமாகக் கொண்டு. (தனிபுகுந்து) – பெரியபெருமாளுடைய அனுபவம் என்னும் உயர்ந்த போகம் பெறத் தனியாகச் சென்று. (பாட்டினால்) – தனது அனுபவத்தை பாசுரங்களாகக் கூறிய அமலனாதிபிரான் என்னும் ப்ரபந்தத்தின் பாசுரங்களாலே, அரங்கனைக் கண்டு, அவனிடமே வாழ்கிறார். இந்த அனுபவத்திற்கு பராசரபட்டர் வழிகாட்டியாகத் தனது ரங்கராஜ ஸ்தவத்தில் விளக்கினார். (கண்டு வாழும்) – அரங்கனைக் காண்பது மட்டுமே தனது வாழ்க்கை என்னும்படி உள்ள ஆழ்வார். (பாணர்தாள்) – இவ்விதமாக வீணையும் கையுமாக பெரியபெருமாளின் திருவடிகளின் கீழ், எப்போதும் கைங்கர்யம் செய்தபடி உள்ள திருப்பாணாழ்வாரின் திருவடிகளை. (பரவினோம்) – துதித்தபடி நின்றோம். இதனால் எளிதில் பெற இயலாத பெரும்பேறு பெற்றோம். இனி எந்தக் குறையும் இல்லை.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த
அமலனாதிபிரான் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

## பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
## அமலனாதிபிரான் வ்யாக்யானம்

### அவதாரிகை

ப்ரவணம் போலே அதிஸங்குசிதமாயிருத்தல், வேதமும் வேதோபப்ரும்ஹணமான மஹாபாரதமும் போலே பரந்து துறுப்புக் கூடாயிருத்தல் செய்யாதே பத்துப்பாட்டாய் ஸுக்ரஹமாய் ஸர்வாதிகாரமுமாயிருக்கும். வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: என்றும், வேதாநத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந என்றும் சொல்லுகிறபடியே வேதோபப்ரும்ஹணமான மஹாபாரத ராமாயணங்களும், நாராயணகதாமிமாம் இத்யாதிகளைச் சொல்லி வைத்து பகவத்கதை அல்லாதவற்றையும் சொல்லி வைத்தது.

விளக்கம் – அமலனாதிபிரான் என்ற பத்துப் பாசுரங்கள் கொண்ட இந்தத் திவ்யப்ப்ரபந்தம் – ப்ரணவ மந்த்ரம் போன்று மிகவும் சுருக்கமானது அல்ல, வேதம் போன்றும், வேதங்களின் உட்பொருளை விளக்கவல்ல மஹாபாரதம் போன்றும் மிகவும் விரிவானதும் அல்ல, அனைவரும் புரிந்து கொள்ள இயலாதபடி கடினமானதும் அல்ல, இதனைக் கற்பதற்குத் தகுதியை (அதிகாரி) எதிர்பார்ப்பதும் அல்ல. இராமாயணம் – வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: –

வேதத்தை அவர்களின் சரிதம் மூலமாக விவரிப்பதாக வால்மீகி முடிவு செய்தார் – என்றது. மஹாபாரதம் – வேதாநத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந – வேதவ்யாஸர் ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தை – என்றது. இப்படியாக உள்ள இராமாயணமும், மஹாபாரதமும், நாராயணகதாமிமாம் – நாராயணனின் கதைகளைக் கூறியபின், மற்ற கதைகளையும் கூறின. (இது போன்ற குறை ஏதும் அமலனாதிபிரானுக்கு இல்லை, காரணம் இந்தப் ப்ரபந்தம் நாராயணனைப் பற்றி மட்டுமே கூறுகிறது என்று கருத்து).

திருவாய்மொழியும் அமர்சுவையாயிரம், பாலோடமுதன்னவாயிரம், உரைகொளின்மொழி என்று ஏதமிலாயிரமாயிருந்ததேயாகிலும் அங்யாபதேச ஸ்வாபதேசமென்ன, ஸாமாநாதிகரண்ய நிர்ணாயகமென்ன, த்ரிமூர்த்திஸாம்ய ததுத்தீர்ண தத்வ நிஷேதமென்ன இவை தொடக்கமான அருமைகளையுடைத்தாயிருக்கும், திருநெடுந்தாண்டகமும் பரப்பற்று முப்பது பாட்டாயிருந்தேயாகிலும் அதுக்கும் அவ்வருமைகளுண்டு, திருமாலைக்கு அவ்வருமைகளில்லையேயாகிலும் தம்முடைய லாபாலாபரூபமான ப்ரியா ப்ரியங்களை ப்ரதிபாதியா நிற்கும், திருப்பல்லாண்டுக்கு இக்குற்றங்களில்லையேயாகிலும் அதுக்குமொரு குற்றமுண்டு, த்ரிவிதாதி காரிகளுடைய குணாகுணங்களை ப்ரதிபாதிக்கையாலே, ப்ரணவம் போலே அல்ல. அதிஸங்குசிதமாய் துர்ஜ்ஞேயமாயிராமையாலே யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நே ஹாஸ்தி ந தத்க்வசித் என்கிறபடியே ஆயிரத்திலொன்றும் கடலில் குளப்படியும் போலே புறம்பில்லாதவையெல்லாம் இதிலேயுண்டாய் இதிலில்லாத தொன்றும் புறம்பின்றியேயிருக்கும்.

விளக்கம் – திருவாய்மொழியானது, (1–3–11) – அமர்சுவையாயிரம், (8–6–11) – பாலோடமுதன்னவாயிரம், (6–5–3) – உரைகொளின்மொழி என்றபடி எந்தவிதமான தோஷங்களும் அற்றதாகவே உள்ளது. ஆனாலும் திருவாய்மொழியில் – பரமாத்மா, ஜீவாத்மா, மூன்று மூர்த்திகளையும் விட உயர்ந்த ப்ரஹ்மம் உண்டு என்பதைத் தள்ளும் கருத்துகள் – போன்ற பல சிக்கலான விஷயங்கள் உண்டு, ஆகவே புரிந்து கொள்ளும் சிக்கல் உண்டு. திருநெடுந்தாண்டகம் என்பது திருவாய்மொழி போன்று விரிவாக இல்லாமல் உள்ளபோதிலும், முப்பதே பாட்டுகள் உள்ளதாக இருந்தபோதிலும், திருவாய்மொழிக்குக் கூறப்பட்ட கடினத்தன்மைகள் இதற்கும் உள்ளன. திருமாலைக்கு மேலே கூறிய தோஷங்கள் இல்லாதபோதிலும், அதில் ஆழ்வார் தனக்கு உண்டான பயன் குறித்து (அரங்கனை அனுபவித பயன் எனலாம்) மகிழ்வதும், தான் முன்பு அனுபவித்த துன்பங்கள் குறித்து புலம்புவதும் தோஷங்களாகவே உள்ளன. திருப்பல்லாண்டில் இதுபோன்று எந்தவிதமான தோஷங்களும் இல்லை என்றாலும், அதற்கும் ஒரு தோஷம் உண்டு. அது என்னவென்றால் – மூன்று விதமான அதிகாரிகளின் (ஐச்வர்யம் மட்டுமே விரும்புபவன், கைவல்யம் விரும்புபவன், பகவத்சரணாகதி விரும்புபவன்) குணங்கள் பற்றிக் கூறுவதே ஆகும். மேலும் திருப்பல்லாண்டு ப்ரணவம் போன்று மிகவும் சிறிதாகவும் இல்லை.(அமலனாதிபிரானின் சிறப்பு என்ன என்று கூறுகிறார்) மஹாபாரதம் – யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத்க்வசித் – இந்த நூலில் கூறப்பட்டவை மட்டுமே மற்ற நூல்களில் உள்ளன, இதில் இல்லாதது மற்றதில் இல்லை – என்பது போன்று, ஆயிரம் என்பதில் ஒன்று அடக்கம் என்பதாகவும், கடல் நீரில் அனைத்து குளங்களின் நீரும் உள்ளது போன்றும், மற்ற ப்ரபந்தங்களில் இல்லாததும் இதில் உள்ளதாகவும், இதில் இல்லாதது மற்றவற்றில் இல்லை என்பதாகவும் அமைந்துள்ளது.

பரவ்யூஹவிபவங்களை ப்ரதிபாதிக்கையன்றிக்கே அர்ச்சாவதாரரூபேண வந்தவதரித்து திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடி வருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, மணத்தூணே பற்றி நின்று வாயார வாழ்த்துகிற ப்ரபந்தமாகையாலே எல்லாப் ப்ரபந்தங்களிலும் இப்ப்ரபந்தத்துக்கு வைலக்ஷண்யமுண்டு. மற்றையாழ்வார்களிற் காட்டிலும் இவர்க்கு நெடுவாசியுண்டு. பல்லாண்டு, போற்றி என்று பாவிக்க வேண்டிற்று அவர்களுக்கு. அது வேண்டாதே ஜன்மஸித்தமாய்த்து இவர்க்கு. குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன் என்கிறபடியே இவர் தம்மை நாலு வர்ணத்திலும் புறம்பாக நினைத்திருப்பர். பெரியபெருமாளும் அப்படியே நினைத்திருப்பர். நித்யசூரிகள் நாலுவர்ணத்திலுமுள்ளாரல்லரே. ஆழ்வார்கள் இருகரையர் என்னும்படியிறே ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் ஐகாந்த்யம். அவரிலும் இவர் பரோபதேசமும் இதரநிரஸனமும் அனுபவவிரோதி என்று வெறும் பெரியபெருமாளையே அடித்தலை செவ்விதாகவனுபவிக்கிறார்.

விளக்கம் – நாம் காண இயலாத பர, வ்யூஹ நிலைகளை மற்ற நூல்கள் கூறுகின்றன. அவற்றைப் போன்று அல்லாமல் நாம் கண்களால் கண்டு களிக்கும்படி அர்ச்சையாக பெரியபெருமாள் அவதரித்தான். இப்படிப்பட்ட அரங்கனை, பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார் – திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடி வருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, மணத்தூணே பற்றி நின்று வாயார வாழ்த்தினார். இந்தப் பெருமாள் திருமொழி போன்று, அரங்கனைப் பற்றிப் பாடுவதால், மற்ற ப்ரபந்தங்களைக் காட்டிலும் அமலனாதிபிரானுக்கு மிகுந்த சிறப்பு உண்டு. அதனால் மற்ற ஆழ்வார்க்களைக் காட்டிலும் இவர்க்குச் மேன்மை உண்டு. அவர்கள் உயர்ந்த குலத்தில் அவதரித்ததால் பல்லாண்டு என்றும், போற்றி என்றும் தங்களைத் தாழ்த்திக்கொண்டு பாடவேண்டியதாக இருந்தது. ஆனால் இவர் பிறப்பிலேயே தாழ்ந்த குலத்தில் வந்ததால், தன்னைத் தானே மேலும் தாழ்த்திப் பாடவேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. திருச்சந்தவிருத்தத்தில் திருமழிசையாழ்வார் – குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன் – என்று கூறுவது போன்று, இவர் தம்மை நான்கு வர்ணங்களிலும் சேராதவராகவே எண்ணியிருந்தார். பெரியபெருமாளும் இவரை அப்படியே நினைத்திருந்தான். நித்யசூரிகள் எவ்விதம் நான்கு வர்ணத்திற்கு உட்பட்டவர்கள் அல்லரோ அது போன்று இவரும் என பெரியபெருமாள் கருதினான். மற்ற ஆழ்வார்கள் – இங்கு ஒரு கால், அங்கு ஒரு கால் – என்றபடி, பல அர்ச்சாவதாரங்களைப் பாடினார்கள். ஆனால் தொண்டரடிப்பொடியாழ்வார் நம்பெருமாளை மட்டுமே பாடினார். அவரது (தொண்டரடிப்பொடியாழ்வார்) பாசுரங்களில் – மற்றவர்க்கு உபதேசம் செய்தல், மற்ற மதங்களைக் கண்டித்தல் – போன்ற விஷயங்கள் இருந்தன. அவை பெரியபெருமாளை முழுவதுமாக அனுபவிக்கத் தடையாக உள்ளவை ஆகும். எனவே இவர் அது போன்று செய்யாமல், பெரியபெருமாளை திருவடி தொடங்கி, திருமுடிவரை அனுபவிப்பதுடன் நிறுத்துகிறார்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

# ஆளவந்தார் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஆளவந்தாரின் திருநக்ஷத்ரம் இந்த மாதம் 29.07.2007. அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து ஆளவந்தாரைப் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

ஸிம்ஹாநநாம்ச பூதரான ஆளவந்தாருக்குத் திருவவதாரஸ்தலம் சோழ தேசத்திலே திருக்காவேரிதீரத்தில் வீரநாராயணபுரம். திருநக்ஷத்ர கலியுகம் மூவாயிரத்து எழுபதேழுக்குமேல் தாது வருஷம் ஆடி மாஸம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை உத்தராடம் விஷ்கம்பம் பவகரணம். திருத்தகப்பனார் ஈச்வரமுனிகள். திருப்பாட்டனார் நாதமுனிகள். திருத்தாயார் ஸ்ரீரங்கநாயகி. குமாரர் திருவரங்கப்பெருமாளரையர், தெய்வத்துகரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டை நம்பி. திருநாமங்கள் யாமுனாசார்யர், யமுனைத்துறைவர், வாதிமத்தேபஸிம்ஹேந்த்ரர், ஆளவந்தார், பெரியமுதலியார், குடி சொட்டை. திருவாராதனம் நம்பெருமாள். இருப்பிடம் கோயில். இவருக்கு நாதமுனிகள் யாமுனாசார்யரென்கிற திருநாமமும், பகவத் ஸம்பந்தமும், மந்த்ரோபதேசமும் ஸாதித்தருளி, தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரஸாதிக்க உய்யக்கொண்டாருக்கு நியமித்து, யோகரஹஸ்யம் ப்ரஸாதிக்கக் குருகைக்காவலப்பனுக்கு நியமித்தார். அந்த உய்யக்கொண்டார் மணக்கால்நம்பிக்கு நியமித்தார். ஆகையாலே இவருக்குப் புருஷார்த்தங்களும் பகவத் விஷயமும் நாலாயிரமும் சதுர்த்தாச்ரம ஸ்வீகாரமும் முதலான அர்த்த விசேஷங்களெல்லாம் ப்ரஸாதித்தருளினவர் ஸ்ரீராமமிச்ரர். ஆக இவர்க்காசாரியர் ஸ்ரீமத் நாதமுகளும், புருஷகாரர் மணக்கால் நம்பியுமாம். குருபரம்பரை வரிசைக்கு இவர்க்கு ஆசார்யர் மணக்கால்நம்பி. சிஷ்யர்கள் பெரியநம்பி, பெரியதிருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருமாலையாண்டான், தெய்வவாரியாண்டான், வானமாமலையாண்டான், ஈச்வராண்டான், ஜீயராண்டான், ஆளவந்தாராழ்வான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தேவப்பெருமாள், மாறனேரி நம்பி, திருக்கச்சிநம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருக்குருகூர்தாஸர், வகுளாபரண ஸோமயாஜியார், அம்மங்கி, ஆள்கொண்டி, வடமதுரையில் பிறந்த கோவிந்த தாஸர், ராஜபுரோஹிதரான நாதமுனி தாஸர், ரங்கசோழாவின் ராஜபத்னியான திருவரங்கத்தம்மான் ஆக சிஷ்யர் ப்ரதானரானவர் இருபத்திருவர். இவரருளிச் செய்தருளின ப்ரபந்தங்கள் ஸ்தோத்ரரத்னம், ஸித்தித்ரயம், ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹம், ஆகமப்ராமாண்யம், சது:ச்லோகி,. இவர் சதுர்வேத ஷட்சாஸ்த்ராதி ஸகலவித்யா பாடங்களும் அருளிச் செய்து நூற்றிருபத்தஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் நம்பெருமாள் அனுஜ்ஞையினாலே திருநாட்டுக்கெழுந்தருளின ஸ்தலம் கோயில். நிக்ஷேபம் பண்ணப்பட்ட ஸ்தலம் திருப்பார்த்துறையிலே.

இவருடைய தனியன்

யத் பதாம்போருஹ த்யான வித்வஸ்த அசேஷ கல்மஷ:
வஸ்துதாம் உபயாத: யாமுனேயம் நமாமி தம்

பொருள் – எந்த ஒருவரின் தாமரை போன்ற திருவடிகளைத் த்யானிப்பதன் மூலம் எனது அனைத்துப் பாவங்களும் நீங்கப் பெற்றனவோ, எதனால் நான் இந்த உலகில் ஒரு மதிக்கத்தக்க பொருளாக உள்ளேனோ, அப்படிப்பட்ட பெருமை உடைய யாமுனாசார்யரை வணங்குகிறேன்.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்